Registered as a news paper. பக்கங்கள். பன்னிரண்டு+II விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS


The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை - 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 11 (22.01.2005) சனிக்கிழமை இதழ்: 114

# தலைவர் பிரபாகரனுடன் பாலா நேற்று முக்கிய ஆலோசனை!



## இன்று நோர்வே தூதுக்குழுவுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று நண்பகல் வன்னிக்கு வந்ததும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள், சுனாமி அனர்த்தம், சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை ஆகியவை தொடர்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனும் விரிவாகக் கலந்துரையாடினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடன் பீற்றர்சன் சந்திப்பு!

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினர் நாளை தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

நாளை காலை 10.30 மணியளவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் இரு வாரங்களில் மீட்புப் பணிகள் முடிவடையும்!

### அமெரிக்கப் படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தாம் மேற்கொண்டுவந்த நிவாரணம் மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் எதிர்வரும் சில வாரங்களில் முடிவடைந்து விடும் என்று அமெரிக்கக் கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி பிரிகேடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டு உதவிகள்

## சமமாகப் பகிரப்படாதது தொடர்பாக இன்றைய சந்திப்பில் ஆராயப்படும்!

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வெளிநாடுகளால் வழங்கப்படும் நிதியுதவிகளை அரசாங்கம் சமமாகப் பங்கிடாதமை தொடர்பாக இன்றைய சந்திப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்தவிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

லண்டனில் இருந்து நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி திரும்பிய அவர், செய்தியாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்த நிவாரணப் பணிகள் குறித்து

## கூட்டமைப்பு எம்.பிக்களை தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

சுனாமி அழிவினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் எடுத்திருக்கும் முடிவுகள் தொடர்பாக - சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்துவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் ஆராயப்பட்டதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு குறிப்பிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### உதவிப் பணிகள் குறித்து

## நோர்வே தூதுக்குழுவினர் சந்திரிகாவுடன் ஆராய்வு!

(கொழும்பு)



மூன்று நாள் விஜயமாக கொழும்புவந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, ஜான் பீற்றர்சனுடன் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்ட் எப் ஜோன்சன்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

### சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# தொழில்களை வழங்குவதன் மூலமே பாதிப்பிலிருந்து அவர்களை மீட்கலாம்

## உளநலப் பணிக்குழு தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் கலாசார சீர்கேடுகள் உருவாகுவதும் குடிபோதைப் பாவனைகள் அதிகரிக்கும் நிலையும் தற்போது தோன்றியுள்ளதாக அனர்த் தகால உளநலப் பணிக்குழு தெரிவிக்கின்றது.

நேற்று அனர்த்தகால உளநலப் பணிக்குழு நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வளங்குவதன் மூலமும் அவர்களின் தொழில்களை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிகள் செய்து கொடுப்பதன் மூலமுமே அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை அதிலிருந்து மீட்கமுடியும்.

இந்த அனர்த்தத்தின்போது பெரும்பான்மையாக குழந்தைகளும் சிறுவர்களுமே உயிரிழந்துள்ளனர்.

பல குடும்பஸ்தர்கள் தபுதாரர்களாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஒரு அமைப்பு நிறுவுவதன் மூலம் அவர்களைப் பாதிப்புக்களில் இருந்து மீட்டெடுக்க முடியும். சுனாமி அனர்த்தத்தில் மரணித்தவர்களை புதைக்கப்பட்ட இடங்களில் நினைவுத்தூபிகள் அமைக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அனைவரும் ஒன்று பட்டு செயற்பட முன்வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## கலந்துரையாடல்

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு 2005 க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றும் வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணியளவில் உடுத்துறை ம.வி.இல் நடைபெறவுளளது. இந்தக் கலந்துரையாடலில் பரீட்சையில் தோற்றவுள்ள சகல மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேடகப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் கணித, விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை மாலை 2 மணிக்கு புதுக்குடியிருப்பு மகாவித தியாலத்தில் முல்லைத்தீவு வலய மாணவர்களுக்கும், நாளை மறுதினம் 3 மணிக்கு கிளிநொச்சி மததிய கல்லூரியில் கிளிநொச்சி வலய மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளதாகவும் தமிழீழ மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

# மருதனார்மடம் விபத்தில் காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மருதனாமடச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தின்போது படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமடைந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த சிறி கணேஸ் குமார் (வயது 45) என்பவரே மரணமடைந்தவராவார்.

தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று இரவு மரணமடைந்துள்ளார்.














# Job Announcement for Jaffna and Mullaitivu District

HUDEC (*Human Development Centre*) a social & charitable organization based in Jaffna, with 3 sub - offices in Vadamaradchi, Maruthankerny and Mullaitivu announces posts on a contractual basis for the below mentioned departments. The posts will be stationed in the above mentioned districts.

**Management:**

✦ 1 project Manager, responsible for the Tsunami Relief and Rehabilitation Programme. This post will be based in the Maruthankeny HUDEC caritas sub - office.
*Qualification:* Masters degree in social science, Management of related subject.
*Experience:* minimum of 4 years in relief and rehabilitation work

✦ 1 personnel and administration Manager responsible for coordination of the personnel and administration department of the Tsunami relief and rehabilitation programme based in jaffna.
*Qualification:* Degree in administration, management of related subject.
*Experience:* Minimum of 4 years relevant experience.

**Finance:**

✦ 1 Finance manager to be based in Jaffna and responsible for the overall financial management of the Tsunami relief and rehabilitation programme.
✦ 4 finance officer posts to be based in jaffna, Vadamaradchi, Maruthankeny and Mullaitivu HUDEC caritas office.
*Qualification:* Accounting degree and / or any professional qualification in accounting.
*Experience:* Minimum 2 to 8 years depending on the post.

**Logistics:** The posts in clued 1 logistics manager to be based in jaffna and 4 logistics officer posts to be based in Jaffna, Vadamaradchi, Maruthankeny and Mullaitivu HUDEC caritas offices.
*Qualification:* Degree in logistics and / or any professional qualification or equivalent experience in logistical management.
*Experience:* Minimum 2 to 5 years. depending on the post.

**Programmes:** The posts include several field officer post and 3 technical officer posts for the Tsunami relief and rehabilitation on programme based in Jaffna, Vadamaradchi, Maruthankeny and Mullaitivu HUDEC caritas offices.
*Qualification:* Degree in social science management or related subject and / or relevant.
*Experience:* Minimum 2 to 5 years deepening on the posts.

Interested candidates should submit their detailed CV along with supporting documents and references to the address given below. Please send the CV on or before 29.01.2005.

*Postal Address:* Director, HUDEC caritas, PO Box 2, Bishops house, Jaffna.
*Office Address:* Deogu Street, No 14 Mathew's Road, Jaffna.
*Tel / Fax:* +94 (0) 21 222 2571 / 222 7314.
*E_mail:* hudec@sltnet.lk
www.hudecjaffna.org

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்துக்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் புளுங்கல் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்**

**1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களிடமிருந்து கீழ்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப் பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.**

| இ-ல | ப.நோ. கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 சன-வரி (M-T) | 2005 பெ-ப்ர-வரி (M-T) | 2005 மார்ச் (MT) |
| 1 | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 2 | கைதடி | 70 | 70 | 70 |
| 3 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 4 | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 5 | கட்டைவேலி-நெல்லியடி | 45 | 45 | 45 |
| 6 | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 7 | புலோலி | 27 | 27 | 27 |
| 8 | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 9 | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு-நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| மொத்தம் | | 2500 | 2500 | 2500 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங் களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.01.20 ஆம் திகதி தொடக்கம் 2005.02.07 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ சங்கங்களை பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளது.

04. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசிபுளுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப் படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால்மூலமாகவோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 08.02.2005 பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "புளுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி என எழுதப்பட வேண்டும்.

08. கேள்விக் காரர்கள் (**Bidders**) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூசங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (**Performance Bond**) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்டவிலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிக மாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
**தலைவர் /அரசஅதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை / மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**20.01.2005** (C/3755)

## போரால் இடம்பெயர்ந்த மக்களையும்
# சுனாமி மீள் குடியமர்வுத் திட்டத்தில் இணைந்துகொள்ள ஐ. நா. கோரிக்கை!

(கொழும்பு)

உள்நாட்டுப் போரால் இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களையும், சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீளக்குடியமர்த்தல் திட்டத்தில் இணைத்துக் கொள்ளு மாறு, ஐக்கிய நாடுகளின் அகதி களுக்கு பொறுப்பான ஸ்தாபனம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது என வொய்ஸ் ஒ.ஃப் அமெரிக்கா செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஸ்தாபனத்தின் பிரதி உயர் ஸ்தானிகர் மோர்ஜேன் - சுனாமித் தாக்கத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்து பார்வையிட்ட பின்னரே இந்தக் கோரிக்கையைக் அரசுக்கு விடுத்துள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர் களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்கள் உள்நாட்டு யுத்தத் தால் ஏற்கனவே இடம்பெயர்ந் திருந்த இவர்களே, மீண்டும் சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர வேண் டிய சூழ்நிலைக்கு உள்ளானார் கள்.

போரினாலும், சுனாமியாலும், பாதிக்கப்பட்ட மக்களைச் சம காலத்தில் இணைத்து, மீளக்குடி யமர்த்தும் பணிகளில் ஈடுபட இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

கடந்த 20 வருடகால யுத்தத் தில், கிட்டத்தட்ட 80 ஆயிரம் மக்கள் இவ்வாறு இடம்பெயர்ந் துள்ளனர். அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி யான, வடக்கு - கிழக்கு பிரதேசங் களிலுள்ள நிவாரண முகாம் களிலேயே தங்கியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிவாரணப் பொருட்களுடன் 291 விமானங்கள் இலங்கைக்கு

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களைத் தாங்கிய 291 வெளிநாட்டு விமானங்கள் இதுவரை இலங்கைக்கு வந்துள்ளன.

அமெரிக்காவிலிருந்து 40 விமானங்கள் இதுவரை இலங்கையை வந்தடைந்துள்ளன. இந்தியாவிலிருந்து 9 விமானங்கள் வந்துள்ளன.

இதேவேளை - சுனாமியில்யில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவா ரணங்களைத் தாங்கிய ஸ்பெய்ன் நாட்டு விமானமொன்று நேற்று முன் தினம் இலங்கையை வந்தடைந்தது.

இந்த விமானத்தில் நிவாரண சேவைக்குழுவொன்றும் வந்துள்ளது. வைத்தியர்கள், பொறியிலாளர்கள் உட்பட பலர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

# ஓய்வூதிய திகதிகளை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஓய்வூதிய கொடுப்பனவுப்பணிப் பாளர்மூலம் இந்தவருட மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங் கப்படும் திகதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இதன் படி ஜனவரி 12, பெப்ர வரி 10, மார்ச் 10, ஏப்ரல் 7, மே 12, ஜுன் 9, ஜுலை 11, ஓகஸ்ட் 11, செப்ரெம்பர் 8, ஒக்ரோபர் 6, நவம்பர் 10, மற்றும் டிசம்பர் 8 ஆகிய திகதிகள் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங் கப்படும் திகதிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன. (தே)

# தாதியர் சேவையில் 15 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ள அரசு தீர்மானம்!

அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் 15 ஆயிரம் பேரைத் தாதியர் சேவையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி வருடமொன்றுக்கு 5 ஆயிரம் பேர் வீதம் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெறுமென சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரி வித்தார்.

சுகாதார சேவையைத் திறம்பட முன்னெடுக்க 30 ஆயிரம் தாதியர் தேவைப்படுகின்றனர், ஆனாலும் தற்போது 17 ஆயிரம் தாதியரே சேவையில் உள்ளனர்.

சுனாமி பேரனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு எந்தவித இடையூறுமின்றி, சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சேதமடைந்த வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ பிரிவு கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

புதிதாகச் சேர்ந்துக்கொள்ளப்பட்ட தாதியர் பாதிக்கப்பட்ட பகுதி களில் பணிக்கு அமர்த்தப்படுவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.(தே)

## சுனாமியால் இறந்தோருக்கு
# மரண சான்றிதழ் வழங்குவதில் புதிய நடைமுறை அமுல்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தங்களால் இறந்தவர்களுக்கான மரணச் சான்றிதழ் வழங்குவதற்கு சத்தியப் பிரமாணத்துடன் கூடிய விண்ணப்பப் பத்திரம் ஒன்றை வழங்குவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் ஆலோசனைக்கமைய, தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சம்பந்தப்பட்ட நீதிவான் நீதி மன்றங்களின் பதிவாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சந்திர ஜயதிலக தெரிவித்தார்.

இந்தப் படிவங்கள் பதிவாளர் முன்னிலையில் சம்பந்தப்பட்ட விண் ணப்பதாரி ஒப்பமிட்ட பின்னரே வழங்கப்படும். இந்த விண்ணப்பப் படி வம் பூர்த்தி செய்யப்பட்டு, ஒப்படைக்கப்பட்ட பின்பு, ஒரு நாளில் மர ணப் பதிவு செய்யப்பட்டு, மரணச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக நீதியரசர் தலைமை நீதிபதி சரத் என் சில்வா பதிவாளர் நாயகத்துக்கு 28 ஆம் திகதி விசேட அறிவுறுத்தல் ஒன்றை வழங்கவுள்ளார். (தே)

# அரச ஊழியருக்கு வட்டியில்லா கடன் பொதுநிர்வாக அமைச்சு அங்கீகாரம்

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு 12 மாதங்களுக்கான சம்பளத் தொகையை வட்டியில்லாத இடர் கடனாக வழங்குவதற்குப் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல் கள் அமைச்சு சமர்ப்பித்த பிரே ரணைக்கு அமைச்சரவை அனு மதித்துள்ளது.

இது குறித்த சுற்றறிக்கை - எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கு வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகப் பொது நிர்வாக அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் கருணா ரட்ண தெரிவித்தார்.

சுனாமி பேரனர்த்தத்தால் - வீடு கள் அழிந்திருந்தால் 12 மாதங் களுக்கான கடனும், வீட்டின் பொருட்கள், தளபாடங்கள் அழிந் திருந்தால் 50 ஆயிரம் ரூபா வட்டி யில்லாமலும் வழங்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட அரச ஊழியர் களின் விபரங்களை உடன் வழங்கு மாறு பொது நிர்வாக உள்நாட்டலு வல்கள் அமைச்சு, அனைத்து அமைச்சுச் செயலாளர்களுக்கும் தெரிவித்துள்ளது. (தே)

# சுனாமி அனர்த்த உதவிகள் குறித்து அரசு, அரசசார்பற்ற நிறுவனங்கள் தகவல்களை வெளியிட கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும், அரசசார்பற்ற அமைப்புகளும் சுனாமி அனர்த்தத் தின் பின்னர் கிடைத்த, கிடைக் கப்போகின்ற நிதிகள் தொடர்பாக தகவல்களை வெளியிடவேண்டும் என, ட்ரான்பெரன்சி இன்ர நஷனல் அமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப் பின் இலங்கைக்கான நிறைவேற் றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலிய முன கருத்துத் தெரிவிக்கையில்-

சுனாமி அனர்த்தத்தின் பின் னர் தமக்குக் கிடைத்துள்ள நிவாரண உதவிகள் தொடர்பாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தகவல்களை வெளியிட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் புனரமைப்பு நடவடிக்கைகளின்மீது நம்பிக் கையை வலுப்படுத்தும் செயற் பாடாகும்.

இந்தநிலையில் அரசாங்கமும், அரசசார்பற்ற அமைப்புக்களும் தமது தகவல்களை வெளியிட வேண்டும். அரசாங்கத்தின் இணை யத் தளத்தில்கூட இந்தத் தக வல்கள் வெளியிடப்படவில்லை. இது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தையே ஏற்படுத்தும்.

எனவே, அரசாங்கம் கட்டாய மாகத் தமக்குக் கிடைத்த சுனாமி அனர்த்த நிதியுதவி தொடர்பான தகவல்களை வெளியிடவேண்டும்.

அவ்வாறு நிதி தொடர்பான தகவல்களை வெளியிடப்படும் போது, நாட்டைக் கட்டியெழுப்பு வோம் என்ற அரசின் திட்டத்துக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற் படும்.

ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை உரியமுறையில் செயற் படுத்துவதற்கு இந்தத் தகவல் முக்கியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (01)

# நீதிமன்றுக்கு துப்பாக்கியுடன் வந்த நான்கு தமிழ் இளைஞர்கள் கைது

## கைதியை கொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

கங்கொடவில நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட சிறைக் கைதி ஒருவரைக் கொலைசெய்யும் நோக்குடன் வந்ததாகச் சந்தேகிக் கப்படும் நான்கு தமிழ் இளை ஞர்கள் - ஸ்பெயின் நாட்டுத் தயா ரிப்பான பிறவுன் கைத்துப்பாக்கி யுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தில் சிறைக் கைதி களை அழைத்து வருவதற்கு முன் னர் நடத்தப்பட்ட சோதனை நட வடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

துப்பாக்கியை வைத்திருந்தவர்- கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட சற்குணானந்தன் தேவா னந்தன் எனத் தெரியவருகிறது.

இவர் தெற்கில் இருந்து வாக னங்களைக் கடத்திச் சென்று புலி களின் பிரதேசத்தில் விற்பனை செய் வதான குற்றச்சாட்டில் பலமுறை கைது செய்யப்பட்டவர் என்று விசார ணைகள் மூலம் தெரியவந்துள் ளது.

மற்றவர்களும் வாகனக் கடத்த லோடு தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் சிறையில் உள்ள பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரைக் கொல்ல வந்தி ருக்கலாம் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

# அலுகோசு பதவிக்காக இதுவரை ஒருவர் மட்டுமே விண்ணப்பம்!

(கொழும்பு)

சிறைச்சாலையின் அலுகோசு தூக்குமேடை முதலியின் பதவிக்கு ஒரேயொரு விண்ணப்பமே கிடைத் துளளதாகச் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பத்தை அனுப்பி யவர் அலுகோசுப் பதவிக்குப் பரம் பரை உரிமையுள்ள தூக்குமேடை முதலி பரம்பரையைச் சேர்ந்த இளை ஞர ஒருவரென சிறைச்சாலை ஆணை யாளர் குணரட்ண குடுபபு தெரிவித் தார்.

இந்த விண்ணப்பதாரிக்கு நேர் முகப் பரீட்சை கடந்த வியாழக் கிழமையன்று நடைபெற்றது. அலு கோசு பதவிக்கு அடிப்படைச் சம் பளமாக ரூபா ஏழாயிரமே வழங் கப்படும். இதற்கு மேலதிகமாகத் தூககிலடப்படுபவர்களின் தொகைக் கேற்ப விசேட கொடுப்பனவு வழங் கப்படுமென சிறைச்சாலைத் திணைக் களம் தெரிவித்தது.

தூக்குத் தண்டனை இறுதி யாகச் செயற்படுத்தப்பட்ட காலத் தில், தூக்கிடப்பட்ட ஒருவருக்கென அலுகோசுவுக்கு வழங்கிய தொகை 20 ரூபாவாகும். இதைத் தற்போது அதிகரிப்பது தொடர்பாக ஆராயப் படுமென குணரட்ண குடுப்பு தெரி வித்தார்.

இதேவேளை தூக்குமரத்தைச் சீர்படுத்துவதற்காக, அதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (தே)

# வெளிநாட்டவர்களின் சடலங்கள் தோண்டும் பணிகள் ஆரம்பம்!

சுனாமி கடல் அனர்த்தத்தில் சிக்குண்டு மரணமாகிய வெளி நாட்டவர்களின் உடல்களை, மீண் டும் தோண்டி எடுக்கும் வேலைகள் காலி, உணவெட்டுவ போன்ற பிர தேசங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகியது.

சர்வதேச பொலிஸ் அதிகா ரிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், காலி, கராப்பிட்டிய போதனா வைத் தியசாலையின் விசேட நீதிமன்ற அதிகாரி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை மரணவிசாரணை அதிகாரி மற்றும் பொலிஸ் அதி காரிகளின் கண்காணிப்பின்கீழ் உடல்கள் தோண்டும் பணிகள் ஆரம்பமாகின.

வெளிநாட்டவர்களின் உடல் கள் புதைக்கப்பட்டதாகச் சந்தே கிக்கப்பட்ட பத்துப் புதைகுழிகளில் மூன்று இவ்வாறு தோண்டப்பட்டன.

ஏனையவை அடுத்தடுத்த நாட் களில் தோண்டப்பட்டன.

இவ்வாறு தோண்டப்பட்ட புதை குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட சட லங்களில், இரண்டு வெளிநாட்ட வர்களது சடலம் என அடையாளம் காணப்பட்டன.

இந்த இரண்டு சடலங்களுமே பெண்களுடையதெனவும், ஒன்று எகிப்து நாட்டவரது எனவும் பொலி ஸார் தெரிவித்தனர். அந்தச் சட லங்கள் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# சுனாமியால் 707 சிறுவர்கள் பெற்றோர்களை இழந்துள்ளனர்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் வடக்கு - கிழக்கில் பெற்றோர்களை இழந்த 707 சிறுவர்கள் இருப்பதாகச் சிறு வர் நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் சரத் அபயகுண வர்த்தன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 368, அம்பாறை மாவட்டத்தில் 172, திரு கோணமலை மாவட்டத்தில் 32, கிளிநொச்சி மாவட்டத்தில் 99, யாழ்ப்பாண மாவட்டத்தில் 36 என மொத்தம் 707 சிறுவர்கள் இது வரை பெற்றோர்களை இழந்துள்ள னர்.

இவர்களில் 16 பேர் உறவினர்க ளோடு தங்கி இருக்கின்றனர். இவர் கள் பற்றிய விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதி லும் இந்தச் சிறுவர்களை, சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் தனது பொறுப்பில் கையேற்கவுள் ளது.

18 வயதுக்குக் குறைந்த, பதி னைந்து, பதினாறு வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகள் 300 பேரளவில் பெற்றோர்களை இழந்துள்ளனர். இவர்கள்மீது மிகுந்த கவனம் செலுத்தப்படுவதாகவும், இவர் களை சிறுவர்கள் நன்னடத்தைத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் தங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவ தாகவும் அவர் தெரிவித்தார்.

வி.பி. முக்கோணத் தொடர்

# தோல்வியின் விளிம்பில் இருந்து மழையால் மீண்டது அவுஸ்ரேலியா



(சிட்னி)

பிறிஸ்பேனில் நேற்று பகலிரவாக நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி தோற்கடிக்கும் வாய்ப்பு மழையால் பறிபோனது.

வி.பி.கிண்ணத்துக்கான முக்கோண போட்டித் தொடரில் நேற்று மேற்கிந்தியத் தீவுகள் – அவுஸ்ரேலிய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஹின்ட்ஸ் – கைல் ஜோடி களமிறங்கி அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கியது. ஸ்கோர் 29 ஆக உயர ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் கைல் ஆட்டமிழந்தார். இவர் 22 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

அடுத்து சர்வான் இணைந்து கொண்டார். ஸ்கோர் 84 ஐத் தொட்டபோது சர்வான் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த லாராவும் சோபிக்காமல் 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

92 ஓட்டங்களுக்குள்ளாகவே 3 முன்னணி வீரர்களை இழந்தநிலையில் களமிறங்கிய சந்தர் போல் – ஹின்ட்ஸுடன் இணைந்து அபாரமாக ஆடினார். இந்த ஜோடி 89 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது.

ஸ்கோர் 181 ஆக உயர்ந்தபோது சந்தர்போலின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 48 பந்துகளில் 1 சிக்ஸருடன் 45 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்ததாக வந்த சாமுவேல் 13 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக பிறாவோ வந்து நிலைத்து நின்று ஆடமுற்பட்டார். இவரும் 22 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதனிடையே ஹின்ட்ஸ் சதமடித்தபோதும் 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பிறெளன் –0, பிறாட்சோ – 01, ஓட்டங்களுடன்



ஆட்டமிழக்க 50 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட் இழப்புக்கு 263 ஓட்டங்களைப் பெற்றது.

ஜிலெஸ்பி –3, வற்சன் – 2, லீமன் –1, லீ –1, கஸ்பரோவிச் –1 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சுலபமான இலக்கு எனக்கருதி அவுஸ்ரேலிய அணி களமிறங்கியபோதும் – அடுத்தடுத்து அதிர்ச்சியே காத்திருந்தது.

அவுஸ்ரேலிய அணி வீரர்கள் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்பத் தொடங்கினர். கில்கிறிஸ்ட் – 6, ஹைடன் –6, பொண்டிங் –2, சைமன்ஸ் –1, கிளார்க் –2 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஸ்கோர்



30 ஐ தொடமுன்னர் ஆட்டமிழந்து சென்றனர்.

மார்ட்டின் 14 ஓட்டங்களையும், லீமன் –10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

11 ஓவர்களில் [illegible] விக்கெட் இழப்புக்கு 43 ஓட்டங்களைப் பெற்[illegible]ருந்தநிலையில் மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றி வாய்ப்புப் பறிபோனது.

## இலங்கைக்கு உதவி வழங்க நியூஸிலாந்தில் இன்று கிரிக்கெட் போட்டி!

(கிறைஸ்ட்சேர்ச்)

சுனாமி நிவாரண நிதிக்காக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை நடத்தும் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரில் முதல் ஆட்டம் இன்று நியூஸிலாந்தில் – கிறைஸ்ட்சேர்ச் நகரில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் உலக லெவன் அணியும் நியூஸிலாந்து அணியும் மோதவுள்ளன.

உலக லெவன் அணியில் இலங்கை வீரர்கள் முரளிதரன், சனத் ஜயசூரிய, சமிந்த வாஸ் மற்றும் குமார் சங்கஹார ஆகியோர் விளையாடவுள்ளனர்.

இந்தப் போட்டி மூலம் சுமார் 7 கோடி ரூபா நிதியைத் திரட்டிக்கொள்ளமுடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள நியூஸிலாந்து கிரிக்கெட் சபை –

இந்த நிதியைக் கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மாதிரிக் கிராமங்களை அமைக்கவுள்ளதாகவும், குறைந்தது நான்கு கிராமங்களை இவ்வாறு அமைக்கமுடியுமெனத் தாம் கருதுவதாகவும் தெரிவித்துள்ளது.

விளையாட்டு

# இந்திய வீராங்கனை சானியா செரினா வில்லியம்ஸிடம் தோல்வி!



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் இந்தியாவின் சானியா மிஸ்ரா மூன்றாம் சுற்று ஆட்டத்தில் முன்னணி வீராங்கனை செரினா வில்லியம்ஸிடம் தோல்வி கண்டார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டி அவுஸ்ரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று 3ஆவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் அமெலி மௌரிஸ்மோ (பிரான்ஸ்) – அனா இவேனாவிக் (சேர்பியா) மோதினர்.

மௌரிஸ்மோ இதில் 6-2, 7-5 என்ற நேர் செட் கணக்கில் எளிதாக அனாவைத் தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய ஆட்டங்களில் ரஷ்ய வீராங்கனை வெரா 7-5, 6-4 என்ற செட் கணக்கில், லீனா (ஜேர்மனி)வையும், இலியா (இத்தாலி) 6-1, 6-0 என்ற நேர் செட்டில் எலீனா பால்ட்சாவையும் (ஜேர்மனி) தோற்கடித்து அடுத்த சுற்றுக்குள் நுழைத்தனர்.

எல்லோராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட சானியா மிர்சா – செரினா வில்லியம்ஸ் மோதிய ஆட்டத்தில் செரினா வெற்றிபெற்றார். அவர்



சானியா மிர்சாவை அதிர்ச்சி அளிக்கும் வகையில் 6-1, 6-4 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று அடுத்த சுற்றில் நுழைந்தார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் உலகின் முதல்நிலை வீரரான பெடரர் (சுவிற்சர்லாந்து), பின்லாந்து வீரர் ஜார்க்கோவுடன் மோதினார். இதில் பெடரர் முதல் செட்டைக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் அவர் 5-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தபோது ஜார்க்கோ காயமடைந்தார்.

தொடர்ந்து ஆடமுடியாததால் அவர் வெளியேறினார். இதனால் பெடரர் வெற்றிபெற்று அடுத்த சுற்றில் நுழைந்தார். மற்றொரு ஆட்டத்தில் சபீன் (ரஷ்யா) 6-4, 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் குரோஷிய வீரர் மரியோ அனிக்கைத் தோற்கடித்தார்.

அதேவேளை நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டங்களில் பெண்கள் பிரிவில் வீனஸ் வில்லியம்ஸ்,



டேவன் போர்ட் ஆகியோர் அபாரமாக ஆடி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர். ஆண்கள் பிரிவில் லேடன் ஹெவிட், டிம் ஹென்மேன் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன் போர்ட், செக் குடியரசின் மைக்கேலா பாஸ்டிகோவாவை எதிர்த்து விளையாடினார். இவர் 2-6, 6-2, 6-2 என்ற செட்களில் பாஸ்டிகோவை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் – எட்டாம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், சீனாவின் பெங்சாயைச் சந்தித்தார். அபாரமாக விளையாடிய வீனஸ் 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்றார். ரஷ்யாவின் முன்னணி வீராங்கனைகளான அனஸ்டாசியா மிஸ்கினா எலீனா டெமன்டிவா, தாதியானா பனோவா ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

மிஸ்கினா 6-4, 6-2 என்ற செட்களில் இஸ்ரேலின் ஸிபோரா ஆப்ஸிலரையும் தாதியானா 3-6, 6-4, 6-2 என்ற செட்களில் சேர்பியாவின் ஜெலீனா ஜன்கோவிக்கையும், டெமன்டிவா 6-2, 6-1 என்ற செட்களில் சகநாட்டு வீராங்கனையான அன்னாசிக் வெடாட்சியையும் வீழ்த்தினர்.



ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாம் நிலை வீரரான அவுஸ்ரேலியாவின் ஹெவிட், அமெரிக்காவின் ஜேம்ஸ் பிளாக்கைச் சந்தித்தார். 4-6, 7-6, 6-0, 6-3 என்ற செட்களில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு இவர் தகுதி பெற்றார்.

மற்றைய போட்டிகளில் இங்கிலாந்தின் டிம் ஹென்மேன் 7-5, 6-1, 6-4 என்ற செட்களில் ருமேனியாவின் விக்டர் ஹன்ஸ்காவையும், ஆஜென் ரீனாவின் கில்லர்மோ கோரியா 6-4, 6-7, 6-3, 7-6 என்ற செட்களில் பிரேஸிலின் ரிக்கார்டோ மெல்லோவையும், ஆஜென்ரீனாவின் டேவிட் நள்பாந்தியன் 6-0, 6-3, 2-6, 6-2 என்ற செட்களில் ஸ்பெயினின் சான்ணுயகோ வென்டூராவையும் வீழ்த்தினர். எதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற சிலியின் நிக்கோலஸ் மாசு, ஜேர்மனியின் பிளிப் கோல்சிக்ரிபருக்கு எதிரான போட்டியில் காயம் காரணமாக விலகினார். மாசு 0-6, 0-2 என்ற பின் தங்கிய நிலையில் இருந்தார்.

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தி சிம்பாப்வே அணி வெற்றிபெற்றது!



டாக்காவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஒருநாள் போட்டித்தொடரில் – பங்களாதேஷ் அணியை 22 ஓட்டங்களால் சிம்பாப்வே அணி வெற்றிகொண்டது.

நேற்றுமுன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

மட்சிகென்யேரி – றோஜர் ஜோடி களமிறங்கிய போதும் – ஸ்கோர் 3 ஆக இருந்தபோதே முதல் விக்கெட் வீழ்ந்தது. ஒரேயொரு ஓட்டத்துடன் றோஜர் நஜ்முல் ஹூசேனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் களம்புகுந்த இப்ராஹிமும் ஒரேயொரு ஓட்டத்துடன் பாஸ்யாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பநேரிட்டது. இதன்பின்னர் வந்த மசகட்சா நிலைத்துநின்று அணிக்கு தெம்பைக் கொடுத்தார். இதனால் ஸ்கோர் 84 ஆக உயர்ந்தது. அவ்வேளை 33 ஓட்டங்களுடன் மட்சிகென்யேரி ஆட்டமிழந்தார்.

பின்னர் மசகட்சா ஸ்கோர் 107 ஆக உயர்ந்தபோது ஆட்டமிழந்தார். இவர் 63 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்களைக் குவித்தார்.

அடுத்து தைபு – ரெய்லர் ஜோடி ஓரளவுக்கு நின்றுபிடித்து ஆடியது. ஆயினும் தைபு 28 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானதால் சிகும்புரா களமிறங்கினார். இந்தநிலையில் ஸ்கோர் 188 ஆக உயர்ந்தது. அப்பொது ரெய்லர் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பன்யங்கார நிதானமாக – அதே வேளை அடித்து ஆடினார். இதனால் ஸ்கோர் வேகமாக உயர்ந்துகொண்டிருக்க சிகும்புரா ஆட்டமிழந்தார். இவர் 32 பந்துகளில் 1 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 41 ஓட்டங்களைச் சேர்த்தார்.

அடுத்துவந்த உற்செயா 6 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். ஆட்டநேரமுடிவில் ஹொண்டோ 7 ஓட்டங்களுடனும், பன்யங்கார 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சிம்பாப்வே 8 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஹூசேன், மஹ்மூத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், பாஸ்யா, ரசாக், சாலே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களாதேஷ் அணி நின்றுபிடித்து ஆடிய போதும் 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை



யும் இழந்து தோல்வியுற்றது.

ராஜின் சாலே 45 பந்துகளில் 40 ஓட்டங்களையும், இக்பால் 12 ஓட்டங்களையும், ஹபிபுல் பசார் 39 ஓட்டங்களையும், அஷ்ரபுல் 42 ஓட்டங்களையும், அகமட் –1, கபாலி –4, மசூத் – 3 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் வந்த காலித் மஹ்மூத், பாஸ்யா இருவரும் அதிரடி ஆட்டம் ஆடினர். ஆனாலும் மஹ்மூத் 30 பந்துகளில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததையடுத்து வந்த ரசாக் – 0, ஹூசேன் – 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் பங்களாதேஷ் அணி தோல்வியுற்றது.

ஆட்டநேர முடிவில் பாஸ்யா 26 பந்துகளில் 1 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.


48.1 ஓவர்களில் 229 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் பங்களாதேஷ் அணி 22 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

ஹொண்டோ – 3, பன்யங்கார – 2, உற்செயா – 2, மொபோபு –1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


5 போட்டிகளைக் கொண்ட தொடரில் சிம்பாப்வே 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கிறது.

# முயல்கள் ஓநாய் பிடித்த விதம்


1. விளையாடிக் கொண்டிருந்த முயல்களை ஓநாய் பார்த்தது. நல்ல வேட்டை என்று நினைத்தது.



2. ஓநாயைப் பார்த்த முயல்கள், விளையாட்டை நிறுத்திவிட்டு ஓநாயைப் பிடிக்கத் திட்டம் போட்டன.



3. மரக்கிளையை நூலால் கட்டி இரு முயல்கள் பிடித்திழுக்க, ஒரு முயல் ஓடிவந்து, அந்த இடைவெளியில் பாய்ந்தது.



4. அதைத் தொடர்ந்துவந்த ஓநாயும் பாய்ந்தது. கயிற்றைப் பிடித்திருந்த முயல்கள் கயிற்றை விட்டு விட்டு ஓடின. ஓநாயின் வால், மர இடுக்கில் மாட்டிக்கொண்டது. முயல்கள் வேறு இடத்துக்குச் சென்று சந்தோஷமாய் விளையாட்டைத் தொடர்ந்தன.



இங்கே மடிக்கவும்




# சிறுவன்

**சிந்தனைக்கு**

கர்வமும், பெருமையும் ஒருவரை உன்னத நிலைக்குக் கொண்டு செல்லாது. மாறாக கீழ் நிலைக்கே கொண்டுசெல்லும்.





*அன்புக்குரிய சிறுவர்களே!*

உங்களில் பலர் பாடசாலை செல்லும் அவசரத்தில் காலை நேர உணவை உட்கொள்வதில்லை. அல்லது ஓரிரு வாய் உணவை மட்டுமே உட்கொள்கின்றீர்கள்.

சிறுவர்களே! காலை நேர உணவை அனைவரும் சாப்பிட வேண்டும். அதற்கு என்ன காரணம் தெரியுமா? நாங்கள் உண்ணும் உணவில் போசாக்குச் சத்துக்கள் உள்ளடங்கியிருக்கவேண்டும். அப்போதுதான் எங்களால் சுகதேகிகளாக வாழமுடியும்.

போசாக்கு அல்லது சம ஊட்டச்சத்து உணவு என்றால் என்ன? ஒருவருக்குத் தேவையான போசாக்குச்சத்தை வழங்கக் கூடிய உணவுகளை சம ஊட்டச்சத்து உணவு என்று கூறுகிறோம். இதில் மாச்சத்து, புரதம், கொழுப்புச்சத்து, விட்டமின், கனிப் பொருட்கள் என்பன அடங்கியிருக்கும்.

எனவே உங்களுடைய மூன்றுவேளை உணவையும் கவனமாக உண்ணுங்கள். அப்போதுதான் அனைத்துச் சத்துக்களும் கிடைக்கும்.

*பாசமுடன் சாரு அக்கா*

## குருவிக் குடும்பம்

குருவிக்கூடு குருவிக்கூடு
கொம்பில் உள்ள வீடு!
குருவிக்குஞ்சு குருவிக்குஞ்சு
குடிசை உள்ள பிள்ளை!

குருவிக்குஞ்சை குருவிக்குஞ்சை
ஊட்டுங்குருவி அம்மா!
குருவியோடு குருவியாகக்
குந்துங் குருவி அப்பா!

சிறு குடும்பம்! சிறிய வீடு!
சிறுமை இல்லா வாழ்வு!
சுறுசுறுப்பும் விறுவிறுப்பும்
துலங்க வாழும் வாழ்வு!

ச.அர்ச்சனா
தரம் – 8
யா/இணுவில் மத்திய கல்லூரி.

# கைவண்ணம்





சி.சிவராஜ்
நாரந்தனை கனேச
வித்தியாலயம்

# My Self

My name is S.Mayuran. I live in Commanthuray. My father's name is Sitsabesan. My mother's name is Shanthi. I am eight years old. I study at J/Kamparmalai A/T/K School. I have a sister and a brother. My favourite subjects are English and Maths. My friend name is Anpan.

சி.மயூரன். தரம் -01.

# கண்டு பிடிப்புகள்

1. ஆகாய விமானம் றைட் சகோதரர்களால். 1903 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது.
2. ஒலிபெருக்கி கொறேஸ்சோட்டால். 1785 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.
3. மோட்டார் சைக்கிள் ஜி டேம்பெர் என்பவரால் 1885 ஆம் ஆண்டில் ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டது.
4. நைலோன். டொக்டர் வலோஃ என்பவரால் 1843 ஆம் ஆண்டில் பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்டது.
5. துவிச்சக்கரவண்டி பற்றிக் மக்மில்லன் என்பவரால் 1839 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

மு.தர்சினி. தரம் -10
விக்னேஸ்வராக் கல்லூரி.

# புத்திமான் பலவான்



ஒரு ஊரில் கமலன் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் நல்ல புத்திசாலி. அவன் தரம் 5 இல் படிக்கும் மாணவன். கமலன் பாடசாலைக்கு ஒரு நாளும் போகாமல் இருந்ததில்லை.

அன்று அவனுக்குப் பாடசாலை விடுமுறை நாள். அவன் தனது நண்பர்களைக் கூட்டிக்கொண்டு கடற்கரைக்குப் போனான். அங்கு நண்பர்களுடன் கடலில் குளித்தான். அப்போது. ஒரு மூடிய செம்பு கடல்மீது மிதந்து வந்தது.

அதைக் கமலன் ஆர்வத்தோடு எடுத்துத் திறந்தான். அதிலிருந்து ஒரு பெரிய பூதம் வெளிக்கிளம்பியது. அது வரவரப் பெரிய பூதமாகி கமலன் முன் நின்றது. அதைக் கண்ட கமலன் பயப்படாமல் நின்றான்.

பின்பு. அந்தப் பூதம்- கமலனைப் பார்த்து உன்னைப் பிடித்து உண்ணப்போகிறேன் எனக்குப் பசிக்குது என்றது.

உடனே கமலன் 'பூதமே நீ எவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்கிறாய்'. நீ சிறிதாக இருப்பதைப் பார்க்க விருப்பமாக இருக்கிறது. நீ ஒருமுறை மீண்டும் இந்தச் செம்புக்குள் இருந்து பார்,அதன் பின்னர் என்னை உணவாகச் சாப்பிடலாம் என்றான்.

அவன் கேட்டதற்கிணங்க. அந்தப் பூதம் மீண்டும் சிறிதாகி செம்புக்குள் போனது. அதனை எதிர்பார்த்திருந்த கமலன் உடனே செம்பை மூடி கடலில் எறிந்தான். இதனால் அவன் உயிர் தப்பினான். புத்திமான் பலவான்.

க.ஆனந். தரம் -7. சென்ஜோன்ஸ் கல்லூரி.

# எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் யாழ். வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை.
எனது பாடசாலை வரணியில் அமைந்துள்ளது.
இங்கு தரம் 1 முதல் தரம் 8 வரையிலான வகுப்புக்கள் உள்ளன.
எனது பாடசாலையை நான் மிகவும் நேசிக்கிறேன்.

சு.காயத்திரி.
யா/வரணி வடக்கு
சைவப்பிரகாச வித்தியாசாலை

இங்கே மடிக்கவும்



# மாமரம் யாருடையது?

கிராமத்தில் இருக்கும் செல்வன், தன் வீட்டின்முன் ஒரு மாமரத்தை வளர்த்து வந்தான். அது நன்றாகக் காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்தது.

பாலன், செல்வனின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிப்பவன். மாமரம் காய்த்துத் தொங்குவதைப் பார்த்தான் பாலன். மாம்பழங்களைத் தனக்குரியதாக்கத் திட்டம் போட்டான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், நான்தான் இந்த மாமரத்தை வளர்த்தேன் என்று கூறி, மாம்பழங்களைப் பறித்தான் பாலன். செல்வன், பாலன் பழங்களைப் பறிப்பதை ஆட்சேபித்தான். நான் வளர்த்தது என்று கூறினான் செல்வன். ஆனால், பாலன் பறிப்பதை அவனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.



ஆகையால், அக்பரிடம் போய் முறையிட்டான்.

வழக்கைத் தீர்த்து வைக்குமாறு பீர்பாலிடம் அனுப்பினார் அக்பர். செல்வனையும், பாலனையும் விசாரித்தார் பீர்பால். இருவருமே தான் தான் மாமரத்தை வளர்த்ததாகக் கூறி, தனக்குத்தான் உரிமை என்று வாதாடினார்கள்.

தாம் கூப்பிடும்போது வரலாம் என்றுகூறி இருவரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டார் பீர்பால்.

அடுத்தநாள் இரவு, நம்பிக்கையான வேலையாள் ஒருவனைக் கூப்பிட்டு, பாலன் வீட்டின்முன் நின்றுகொண்டு, திருடர்கள் மாம்பழங்களைப் பறித்துக்கொண்டு ஒடுகிறார்கள், என்று கூச்சல் போடு மாறு சொல்லி அனுப்பினார்.

அதேநேரம், காவலாளி ஒருவனைக் கூப்பிட்டு பாலன் வீட்டுக்குப்போய் மறைவாக நின்றுகொண்டு அவர்கள் என்ன கதைத்துக்கொள்கிறார்கள் என்பதைக் கவனமாகக் கேட்டு வரச் சொன்னார்.

அன்று இரவு வேலையாள் பாலன் வீட்டின் அருகில் நின்று கொண்டு 'திருடர்கள் மாம்பழங்களைப் பறித்துக் கொண்டு ஒடுகிறார் கள்' எனக் கூச்சல் போட்டான்.

கூச்சல் கேட்டு, பாலன் வெளியே வரவில்லை. 'திரு டர்கள் பழங்களைப் பறித்துக்கொண்டு போனால் எனக்கு என்ன கவலை?' என்று வீட்டுக்குள் இருந்தபடியே கூறினான்.

அடுத்தநாள் காலை காவலாளி பீர்பாலிடம் வந்து, தான் கேட்ட செய்தியைக் கூறினான். அடுத்தநாள் இரவு வேலையாளிடம், செல்வன் வீட்டின் முன்னால் போய் நின்று முன்னர் போலவே கூச்சல் போடுமாறு சொல்லி அனுப்பி விட்டு, காவலாளியைக் கூப்பிட்டு மறைவாக நின்றுகொண்டு அங்கே என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று கேட்டுவருமாறு அனுப்பினார் பீர்பால்.

காவலாளி முன்புபோலவே, செல்வன் வீட்டின்முன் நின்று கூச்சல் போட்டான். கூச்சலைக்கேட்ட செல்வன், வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தான். இருட்டில் ஒருவரும் தென்படவில்லை. வீட்டுக்குள் சென்று, மனைவியிடம், 'பக்கத்து வீட்டுக்காரன் பாலனிடமிருந்து மட்டுமில்லை, திருடர்களிடமிருந்தும் மாமரத்தைப் பாதுகாக்கவேண்டியிருக்கிறது.

ஏனென்றால் என் கையால் நான் வளர்த்த மரம் இல்லையா? அதோடு திருடர்கள் திரும்பி வந்தாலும் வரலாம். நான் போய் இரவு முழுவதும் மரத்தின் அடியில் நின்று காவல் காக்கிறேன். என்றுகூறிக் காவல் புரியச் சென் றான் செல்வன்.

மறுநாள் காலையில், காவலாளி வந்து முதல்நாள் இரவு தான் கேட்டதைப் பீர்பாலிடம் கூறினான்.

மறுநாள், இருவரையும் அழைத்து மரம் யாருடையது என்பதை என்னால்தீர்மானிக் கமுடியவில்லை. இருவருமே தனக்குத்தான் சொந்தம் என்று கூறிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகையால், மரத்தை இரண்டு பகுதியாக வெட்டச் செய்து, ஆளாளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்ளுங்கள் என்றார் பீர்பால்.



பாலன் இதற்குச் சம்மதித்தான். ஆனால், செல்வன் மௌனமாக நின்றான். அவனைப் பார்த்து, என்ன சொல்கிறாய்? எனக் கேட்டார் பீர்பால்.

'மரத்தை வெட்டினால் ஒரு வருக்கும் பிரயோசனம் இல்லாமல் போய்விடும். ஆகவே, என் உரிமையை நான் விட்டுக் கொடுக்கிறேன். பாலன் மரத்தை வைத்துக் கொள்ளட்டும்' என்று கூறினான் செல்வன்.

மாமரம் செல்வனுடையதுதான் என்பது மறுபடியும் அவன் சொல்லிலிருந்து நிரூபணமாகிறது, என்பதைக் கண்டுகொண்டார் பீர்பால். பாலனைப் பார்த்து, மாமரம் செல்வனுக்குரியது. நீ பொய் சொல்கிறாய் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். ஆகையால் உனக்குத் தண்டனை கொடுக்கும்படி அரசருக்குச் சொல்லப்போகிறேன் என்றார்.

வழக்குத் தனக்கு விரோதமாகப்போவதை உணர்ந்த பாலன், பீர்பாலின் காலடியில் விழ்ந்து மன்னிப்புக் கேட்டதோடு, செல்வனிடமும் தான் கொடுத்த தொந்தரவுகளை மன்னிக்கும்படி வேண்டினான். பீர்பாலும், மரம் செல்வனுக்குரியது என்று தீர்ப்பளித்து, பாலனுக்கு அறிவுரை கூறி அனுப்பினார்.


# விடுகதைகளும் விடைகளும்

1) அண்ணன் தம்பி இருவர். பன்னிருவரைத் துரத்துவதே இவர்கள் வேலை. அது என்ன?

2) உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ. அது என்ன?

3) கறுப்புச்சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் அவன் யார்?

4) செடியில்லாமல், கொடியில்லாமல் விளையும் பூ என்ன பூ?



5) படியிலே படி என்ன படி?


6) படித்தும் வாங்கலாம். காகிதத்தில் செய்து பறக்கவும் விடலாம். அது என்ன?

7) கண்டு காய் காய்க்கும். காணாமல் பூப்பூக்கும். அது என்ன?

8) என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன் நான் யார்?


விடைகள்

1. கடிகாரம் - முள்
2. குடை
3. பூட்டு
4. உப்பு
5. வாசற்படி
6. பட்டம்
7. அத்திமரம்
8. கண்ணாடி



இந்தச் செவ்வகத்துக்குள் இருக்கும் 11 துண்டுகளுள் 2 துண்டுகள் மட்டும் ஒரே மாதிரியானவை. அவை எவை?

1) படத்தில் பத்து பந்துகளும் பத்து அம்புகளும் உள்ளன. ஆனால் இவற்றுள் ஓர் அம்புதான் பந்தைத் துளைத்துச் செல்லச் சரியாகக் குறிவைத்திருக்கிறது. அந்த அம்பு எது?. அது துளைக்கப்போகும் பந்து எது?



# மூளைக்கு வேலை



1. 660 நிமிடங்களை மணிக்கணக்கில் சொல்லுங்கள்.

2. ஒரு நீலப் பெட்டியின் நிறை 50 கிலோகிராம். அதைவிட 10 கிலோகிராம் அதிக நிறையுடையது சிவப்புப் பெட்டி. சிவப்புப் பெட்டியின் நிறை என்ன?

3. கலாவின் தாயாரின் வயது அடுத்த ஆண்டு அவனைவிட 7 வயது அதிகமாகும். கலாவின் தந்தை, தாயாரைவிட 4 வயது மூத்தவர். கலாவின் தந்தையின் இப்போதைய வயது 52. அப்படி எனில் கலாவின் இப்போதைய வயது என்ன?

## சென்ற வார விடைகள்

*1. 18. முதல் எண்ணுடன் 5 கூட்டப்படும். இரண்டாம் எண்ணிலிருந்து 2 கழிக்கப்படும்.*


*2. ரூபா 3600.*

*3. 5 மணி நேரம் எடுக்கும்.*
*3.45 - 2.30 = 1.15*
*3.45 + 1.15 = 5.00*

இங்கே மடிக்கவும்



1.



2.




1. படம் 1 இன் பாதையைப் பாருங்கள். அதேமாதிரிப் பாதையைக் கீழுள்ள படத்தில் வரையுங்கள்.

2. ஒன்றிலிருந்து பத்து வரையுள்ள எண்களை இணையுங்கள். பின்னர் படத்துக்கு வர்ணந்தீட்டுங்கள்.

# விளையாட்டு

## நிழலாட்டம்



வெயில் காலத்தில் விளையாடக்கூடிய விளையாட்டு. ஓடிச்சென்று உடலைத் தொடுவதற்குப் பதிலாக, அவரின் நிழலைத் தொடவேண்டும்.

ஆட்டக்காரர்களின் அளவுக்கு ஏற்ப, ஆடுகள அமைப்பைச் சதுரமாக அல்லது வட்டமாக எல்லையை அமைத்துக் கொள்ளலாம்.


ஆடுகள எல்லைக்கு வெளியே துரத்தித் தொடுபவர் மட்டும் நிற்க, மற்றைய அனைவரும் ஆடுகள எல்லைக்குள் நிற்கவேண்டும். ஆடுகளத்தினுள் நிற்கும் ஆட்டக்காரர்களின் நிழல் தரையில் விழும். அந்த நிழலின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் துரத்தித் தொடுபவர் மிதித்தால், தொடப்பட்டவர் ஆட்டமிழந்தவராகக் கருதப்படுவார்.

பின்னர் அவர், நிழல் தொடும் ஆளாக மாறுவார். அவர் மற்றையவர்களைத் துரத்திச்சென்று நிழலை மிதிக்கமுயல ஆட்டம் மீண்டும் தொடரும்.

இந்த ஆட்டத்தை நடத்த நடுவர் ஒருவர் இருந்தால் - பிரச்சினைகளுக்கு இடமிருக்காது. ஏனெனில் 'என் நிழலை மிதிக்கவே இல்லை' என்று சிலர் வாதாட, சண்டை வரக்கூடும். எனவே வேறுபாடு பாராமல் நடு நிலையிலிருந்து தீர்த்துவைக்க வேண்டும்.

# ஓவியம் வரைந்து பழகுங்கள்

மிகுதிப் பூனையை வரையுங்கள்



# கவனம் சிதறினால்......

அது. ஆசிரியர் தாமோதரனின் வகுப்பு. அவர் அறைக்குள் நுழைந்ததும் மாணவர்கள் எழுந்து நின்றனர். அவர் தனது இடத்தில் அமர, அனைவரும் அமர்ந்தனர். அவர் கையில் கட்டாக முதலாம் தவணைப் பரீட்சையின் திருத்தப்பட்ட விடைத்தாள்கள்.

கட்டைப் பிரித்து ஒவ்வொரு மாணவரிடமும் விடைத்தாள்களைக் கொடுத்தார் தாமோதரன். பின், தன் கையிலிருந்த பதிவேட்டிலிருந்து ஒவ்வொரு மாணவனுடைய மொத்த மதிப்பெண்களைப் படித்தார். வகுப்பில் அமைதி நிலவியது. அமைதியைக் கலைத்துத் தாமோதரன் பேசினார்.

'இந்த எட்டாம் வகுப்பில் மொத்தம் நாற்பது மாணவர்கள் இருக்கிறீர்கள். இந்தக் முதலாம் தவணைப் பரீட்சையில் நீங்கள் வாங்கிய புள்ளிகள், எனக்குத் திருப்தியாக இல்லை. நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும்' என்றவர், ''முரளி! இங்கே வா'' என்றார்.

முரளி எழுந்து அவரருகே போய் நின்றான். 'இந்த வகுப்பில் எப்போதும் முரளிதான் முதல் மாணவன். இந்த முறையும் அவன் தான் தொண்ணூற்று ஐந்து புள்ளிகள் வாங்கியுள்ளான் முரளி. இதே முயற்சி உங்கள் அனைவரிடமும் வேண்டும்' என்றார்.

மாணவர்கள் அனைவரும் கரவோசை எழுப்ப, முரளி தன்னுடைய இடத்தில் போய் அமர்ந்தான். தாமோதரன் அன்றைய பாடத்தை நடத்தத் தொடங்கினார்.

மறுவாரம்... வகுப்பை நடத்திக்கொண்டிருந்த தாமோதரன் பார்வை மாணவர்களை ஒருமுறை நோட்டமிட்டது. முரளியைக் காணவில்லை. அவன் நண்பன் நந்துவைப் பார்த்தார்.

'நந்து...' நந்து எழுந்து நின்றான். 'முரளி எங்கே?' - கேட்டார் தாமோதரன். 'முரளி வரேல்ல சேர்' என்றான் நந்து.

'ஏன்? வீட்ல ஏதாவது விசேசமா?'

'இல்லை சேர்?'

'எங்கயாவது போய் விட்டானா?'


'இல்லை சேர்'

'உடம்பு சரியில்லையா?'

'இல்லை சேர்'

'அப்ப என்ன நடந்தது?'

'இண்டைக்கு கிரிக்கெட் மட்ச் நடக்குது. அதை டி.வியில பார்க்க வேணும் எண்டு லீவு போட்டிருக்கிறான், சேர்'





'அப்படியா?' என்றார் தாமோதரன். 'சரி நீ இரு' என்று கூற நந்து அமர்ந்தான். தாமோதரன் எந்தவித சலனமுமின்றிப் பாடத்தைத் தொடர்ந்து நடத்தத் தொடங்கினார்.

அந்தஆண்டு இரண்டாம் தவணைப் பரீட்சையின் புள்ளிகள் பட்டியலைப் படித்தார் தாமோதரன். முதல் மாணவனாய் இருந்த முரளி பதினைந்தாவது இடத்தில் தரப்பட்டியலில் இடம்பெற்றிருந்தான்.

தன் நிலையை அறிந்ததும் முரளியின் கண்கள் கலங்கின. சிறிது நேரத்தில் வகுப்பு முடிந்தது. மாணவர்கள் எல்லோரும் எழுந்துபோய் விட்டனர். முரளி மட்டும் தன்னுடைய இடத்தில் அப்படியே அமர்ந்திருந்தான். தாமோதரன் முரளியைப் பார்த்தார். பின் எழுந்து அவனருகே வந்தார்.

'முரளி...?' - இடத்தைவிட்டு எழுந்து நின்றான் முரளி.'

'வீட்டுக்குப் போகேல்லையா?' கேட்டார் தாமோதரன்.

'உங்களோட கதைக்க வேணும் சேர்' என்றான் முரளி குரல் கரகரக்க.

'கதை...

'நான் நல்லாத்தான் படிச்சனான். என்னுடைய ராங் எப்படி சேர் இப்படிக் கீழ வந்தது?

'எல்லாத்துக்கும் நீதான் காரணம்...

'நானா?

'ஆமாம் முரளி! படிக்கிற மாணவர்களுடைய முழுக்கவனமும் படிப்பிலதான் இருக்கவேணும். ஆனா, உன்னுடைய கவனம் திசை மாறிவிட்டுது.

'சேர் என்ன சொல்லுறீங்கள்?'

'ஓம் முரளி. நல்லாப் படிக்கிற நீ கிரிக்கெட் மட்ச் பார்க்க லீவு போட்டதும் எனக்கு அதிர்ச்சியா இருந்தது. நீ விளையாட வேண்டாம். டி.வி பார்க்கவேண்டாம். மட்ச் பார்க்கவேண்டாம் என்று சொல்லல்ல. ஆனா வகுப்புக்கு லீவு போட்டுட்டு மட்ச் பார்த்தது தவறு. ஏனெண்டா அன்றைக்கு உனக்குப் படிப்பைவிட மட்ச்தான் முக்கியமா இருந்திருக்கு. அண்டைக்கு மட்டுமில்ல, பலமுறை நீ டி.வி முன்னால இருந்து மணிக்கணக்காக மட்ச் பார்த்திருக்கிறாய். இரவில கனநேரம் கண் முழிச்சுப் பார்த்திருக்கிறாய். மாணவர்களின் முக்கியமான சொத்தே கவனம்தான். அந்தக் கவனம் உன்னைப் பொறுத்த வரையில் சிதறிப் போயிருக்கு...

'சேர்'

'அந்தக் கவனச் சிதறலால் உன்னால ஒழுங்காப் பாடத்தைப் படிக்க முடியேல்ல...

'உண்மைதான் சேர்...!

'தவறை உன்னிடம் வைத்துக்கொண்டு காரணத்தைத் தேடி ஏன் அலையிறாய்?


'தவறுதான் சேர். நான் செய்தது பிழைதான்.'

'எப்போது உன் தப்பை நீ உணர்ந்திட்டாயோ, அன்றே நீ திருந்தி விட்டாய் என்று அர்த்தம். இனி உன்னுடைய முழுக்கவனத்தையும் படிப்பில காட்டு. மற்ற விடயங்களில அளவோட இரு. மாணவனுக்குப் படிப்புத் தான் முக்கியம். மற்றதெல்லாம் இரண்டாம் நிலைதான். உன் திறமை எனக்குத் தெரியும். அடுத்த பரீட்சையில நீ நிச்சயமா முதல் மாணவனாய் வருவாய்! அவரிடமிருந்து விடைபெற்று வெளியே வந்த முரளி கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டான்.

இங்கே மடிக்கவும்



# அண்ணாவும் தங்கையும்




அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டு விறாந்தையில் அனைவரும் அமர்ந்திருந்தனர். ஒருவித அமைதி அங்கு நிலவியது. பூகம்பத்தால் நிகழ்ந்த அனர்த்தம் அனைவர் மனதிலும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. சங்கர் அண்ணாதான் உரையாடலை ஆரம்பித்தார்.

**சங்கர்** : என்னப்பா அமைதியா இருக்கிறீங்கள்?

**அப்பா** : சங்கர்! பூகம்பம் உருவாகுவதைத் தெரிந்துகொள்ள முடியாதா?

**சங்கர்**: அப்பா! விஞ்ஞானத்தால், இயற்கையின் சீற்றமான பூமியதிர்ச்சி எப்ப ஏற்படும் என்று சொல்லேலாது. ஆனால் உலகில் பூகம்பம் ஏற்படக் கூடிய பகுதிகள் என்று மூன்று பகுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கு.
வடக்கு, தெற்கு அமெரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதி, தெற்கு ஐரோப்பா, தெற்கு ஆசியாவைச் சேர்ந்த பகுதிகள் மற்றையது ஜப்பான், பிலிப்பைன்ஸ், கிழக்கிந்திய நாடுகள் உள்ளிட்ட பசுபிக் கடற்பகுதி நாடுகள்.

**குழலி** : பூகம்பம் எப்படி ஏற்படுது அண்ணா?

**சங்கர்** : பூமி ஆறு பிரதான தகடுகளையும் பல சிறிய தகடுகளையும் கொண்டிருக்குது. இந்தத் தகடுகளின் இணைப்பாலதான் பூமி உருவாக்கப்பட்டிருக்குது. அதோட, பூமியின் உட்பகுதி வெப்பக் குழம்பா இருக்குது. இதற்கு மேல பூமியின் மேற்பரப்பு உறைஞ்சு இறுகி பாறையா மாறி இருக்கு.
பூமியின் எல்லா இடத்திலயும் இந்தத் தகடுகள் ஒரு பருமனா இல்லை. அதோட அவை மெல்ல நகர்ந்த வண்ணமே இருக்கின்றன. இந்தத் தகடுகள் ஒன்றோடு ஒன்று மோதும்போது தான், நிலநடுக்கம் ஏற்படுது.

**குழலி** : நிலநடுக்கம் கடலுக்கடியிலயும் ஏற்படுமா அண்ணா?

**சங்கர்** : ஓம் குழலி. நிலத்திலயும், கடலிலையும் பூகம்பம் ஏற்படலாம்.

**அப்பா** : இப்ப ஏற்பட்ட பூகம்பம் கடலில் ஏற்பட்டதுதானே சங்கர்.

**சங்கர்**: ஓம் அப்பா. கடலுக்கடியில இந்த பூகம்பம் ஏற்பட்டதால்தான், பல தென்னாசிய நாடுகள் பாதிப்படைந்தன. ஆனா சுமாத்திரா தீவுப்பகுதியின் நிலத்தில ஏற்பட்டிருந்தா, அந்த நாட்டிற்கு மட்டும்தான் சேதமேற்பட்டிருக்கும். 9.0 ரிச்டர் அளவு ஏற்பட்டதால தான் பாதிப்புக் கூட.

**அம்மா** : சுனாமி எண்டு ஏன் சொல்லுகினம்?

**சங்கர்** : அம்மா! சுனாமி என்ற சொல் ஜப்பானியச் சொல். எங்களுடைய முன்னோர்கள் இராட்சத அலைகளைக் கடற்கோள் என்று அழைச்சிருக்கினம். இந்த இராட்சத அலைகள் இரண்டு வழிகளில் ஏற்படுது. ஒன்று நிலநடுக்கம், எரிலை வெடிப்பு, இரண்டு சூறாவளி. அதோட பூகம்பத்தால கடலில இராட்சத அலைகள் தோன்ற, முதல் கடல்நீர் பின்னோக்கிப் போகும். இப்படி கடல்நீர் பின்னோக்கிப் போனா இராட்சத அலைகள் தோன்றப் போகுது எண்டு அர்த்தம்.
நாங்களும் வேடிக்கை பார்க்காம பாதுகாப்பான இடங்களுக்குப் போயிடவேணும்.

**குழலி**: ரிச்டர் அளவுத்திட்டம் என்று ஏன் சொல்லினம்?

**சங்கர்** : புவிநடுக்கத்தை அளக்கும் கருவியைக் கண்டு பிடித்தவர் Charls Richter என்பவராவார். இவர் 1935 ஆம் ஆண்டு இதைக் கண்டுபிடிச்சவர். அதனால அவரது பெயரே இதற்குப் பயன்படுது.

**குழலி**: அண்ணா, மனிதர்கள் பூகம்பத்தை உணர முதல் மிருகங்கள், பறவைகள் உணர்வதாக வாசிச்சனான். அது எப்படி?

**அப்பா**: நானும் பத்திரிகைகளில் வாசிச்சனான். இந்தப் பூகம்பத்தால் மிருகங்கள் இறக்கேல்லயாமே!


**சங்கர்**: பூகம்பம் ஏற்பட முதல், இந்தத் தகடுகள் மோத ஆரம்பிக்கேக்க ஏற்படுகிற அலைவெண் அதிர்வு குறைவா இருக்கும். இதை மனிதர்களால உணர முடியாது. ஆனா விலங்கு, பறவைகளால உணர முடியும் அதனால அவை பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் இருந்து நகர்ந்து போயிடும்.

**அம்மா**: அதுகளுக்கு ஐந்தறிவெண்டாலும் இயற்கை கொடுத்திருக்கிற வரப்பிரசாதம் எப்படி இருக்கிது பார்த்தீங்களா?

**அப்பா**: இனி இப்படியான அழிவில இருந்து எங்கள நாங்களும் பாதுகாக்கவேணும்.

**சங்கர்**: கடற்கரையில இருந்து குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் குடியிருப்புகள் அமைச்சும், கடலோரத்தில் வளர்க்கக்கூடிய பவளப்பாறை, சதுப்பு நிலக்காடுகள் மூலமும் கடற்கோள் பேரழிவைத் தடுக்கலாம். இயற்கை அனர்த்தங்கள் பற்றி பாடத்திட்டங்களில் படிப்பிக்கிறது, அதைப்பற்றிய விழிப்புணர்வையும் தரும்.

## நத்தை வீட்டுக்குப் போக வழிகாட்டுங்கள்



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொலல்வல்லான் சோர்வுஇலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது*
*திருக்குறள்*

# நமது நோக்கு

## அரச கூட்டணிக்குள் விரிசல் அதிகரிப்பு; சந்தர்ப்பவாத அரசியல் சாயம் வெளுக்கிறது...!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினுள்-பங்காளிக் கட்சிகளிடையேயான உள்முரண்பாடுகள் என்பது கூட்டணி அமைக்கப்பட்ட நாள்முதல் இருந்து வந்துள்ள போதிலும், கைப்பற்றிய ஆட்சிப் பீடத்தையும், அதிகாரக கதிரைகளையும் இறுகப்பற்றித் தக்கவைத்துக்கொள்ளும் சுயநல நோக்குடன் அந்த முரண்பாடுகள் முனுமுனுப்பு நிலையிலிருந்து மோதல் நிலைக்கு மாறாதவகையில் இரு தரப்பும் 'ஓடும் புளியம்பழமும்' போன்ற உறவைக் கட்டி காத்தன என்றே கூறவேண்டும்.

பல சமயங்களில் உள்ளக முரண்பாடுகள் - கருத்து நிலையிலிருந்து வாக்குவாத நிலைக்கு உயர்ந்த போதிலும், வாக்குவாதங்கள் விரிசலை உண்டுபண்ணுமளவுக்கு விஸ்திரமடைவதைத் தடுப்பதில் ஜனாதிபதியின் விட்டுக்கொடுப்பே முக்கிய பங்கை வகித்தது என்றால் அதில் மிகையில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனிக்குள் ஜே.வி.பியினரின் மேலாதிக்க அதிகாரப்போக்கு, அதில் உள்ள ஏனைய சிறு பங்காளிகள் அனைவரையும் ஓரம் கட்டி விலாசமற்றவர்களாக்கிவிட்டதில், ஜே.வி.பியின் பலமானது ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகார பலத்துக்கே சவால்விடும் வகையில் வளர்ந்துள்ளமைதான் வியப்புக்குரிய விடயமாகும்.

இதுவே இன்று ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல் தரும் விடயமுமாகும்.

ஆரம்பத்தில் ஐ.தே.கட்சியை அரச பீடத்திலிருந்து அகற்றவும், சமாதான முயற்சிக்கு ஆப்பு வைக்கவும் மட்டுமே ஜனாதிபதிக்கும், ஜே.வி.பியினருக்குமிடையிலான கூட்டணி உறவு ஏற்பட்டதெனலாம். இந்த உறவானது கொள்கையடிப்படையிலான முரண்பாடுகள் எதுவும் தீர்க்கப்படாமலே இருதரப்பினருக்குமிடையே உருவானதால், உடன்பாடு காணப்படாத விடயங்கள் பல அவர்களுக்குகிடையே உறங்கு நிலையிலுள்ள எரிமலையாக - எந்தக்கணத்திலும் குமுறி வெடிக்கத் தயாராகவே இது நாள் வரை இருந்து வந்துள்ளது என்பதும் உண்மையே...

அவ்வப்போது சில விடயங்களில் ஜனாதிபதிக்கும், ஜே.வி.பியினருக்கும் ஏற்பட்ட கருத்து ரீதியிலான பனிப்போர் நிலைமையானது ஜனாதிபதியின் விட்டுக்கொடுத்தல் அணுகுமுறைகளால் தற்காலிகமாகத் தணிந்தது போல் வெளிக்கு காணப்பட்டாலும் உள்ளுக்குள் குமுறிக்கொண்டே இருந்தது என்றே கூறவேண்டும்.

அரசின் பெரும்பான்மை வலு குறைவாக இருந்தமையும், பல்வேறு கொள்கைகளைக் கொண்ட முரண்பாடுகளின் மூட்டையாக அரசாங்கம் அமைந்திருந்தமையும் ஜனாதிபதியின் விட்டுக்கொடுத்தல் அணுகுமுறைக்கு காரணமாக இருந்தது.

இதனைத் தனது பலமாகக் கருதிய ஜே.வி.பி, ஜனாதிபதியை எந்த ஒரு முக்கிய விடயத்திலும் சுயாதீனமாக முடிவெடுக்க முட்டுக்கட்டையாக தொடர்ந்து இருந்து வந்துள்ளமையானது அவருக்கு எரிச்சலூட்டும் விடயமாகவே தொடர்ந்தது.

குறிப்பாக சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடயங்களில், ஜனாதிபதி ஒரு முடிவுக்கு - தீர்க்கமான முறையில் வருவதற்கு ஏனைய பேரினவாத சக்திகளுடன் ஜே.வி.பியே பிரதான தடைக்கல்லாக விளங்கியதெனலாம். இதனால் அவர் சர்வதேச சமாதான ஆர்வ சமூகத்தின் அதிருப்திக்கும், அழுத்தத்திற்கும் கூட உள்ளாக நேர்ந்தது.

இந்த நிலையில் சுனாமி அனர்த்தம் ஏற்படுத்திய தாக்கம் இலங்கை அரசியலிலும் பாதிப்புக்களை உண்டுபண்ணவே செய்துவரும் நிலையில், ஜே.வி.பியின் செயற்பாடுகள் ஜனாதிபதிக்கு அதிகபட்ச எரிச்சலை ஏற்படுத்தியதால் ஜே.வி.பிக்கு எதிராக கடுமையான சில நடவடிக்கைகளை எடுத்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தை அவருக்கு உண்டு பண்ணியது.

நிவாரணப் பணிகளில் ஜே.வி.பியினர் தம்மை முதன்மைப்படுத்தி செய்துவந்த பிரசாரங்களை அரச ஊடகங்கள் வெளியிடக்கூடாதென தடைவிதித்த ஜனாதிபதி - தனது அதிகாரபலத்தை அவர்களை நோக்கிப் பிரயோகிக்கத் தொடங்கினார்.

ஜனாதிபதிக்கு ஐ.தே.கட்சி நாட்டை நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுக்க முழுமையான ஆதரவை வெளிப்படையாகவே வழங்க முன்வந்த வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்த முனைந்துள்ளார் போலும். ஜனாதிபதியின் இந்த அதிரடிச்செயற்பாடு, ஜே.வி.பியினருக்கு கடுப்பை ஏற்படுத்தியதன் விளைவே அவர்களிடையேயான உள்முரண்பாடுகள் விரிசல் காணத்தொடங்கியுள்ளன.

இதன் வெளிப்பாடுகளே ஜனாதிபதிக்கு எதிரான சோமவன்ச அமரசிங்கவின் எச்சரிக்கை. அரசின் செயற்பாட்டின் பொய்மைத் தன்மையை வெளிப்படுத்தும் ஜே.வி.பி அமைச்சரின் 'நாட்டை மீளக் கட்டியெழுப்புவோம் என்ற அரசின் உறுதிமொழி வெறும் பம்மாத்து' என்ற கண்டன விமர்சனம் போன்றவைகளாகும்.

இவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மிகப் பலவீனமான தன்மையைப் பகிரங்கப்படுத்தியுள்ளதுடன், ஜனாதிபதி தனது அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய மாற்று உறவுகளைத் தற்காலிகமாகவேனும் தேட வேண்டிய தேவையையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசுக்குள் தற்போது உருவாகியுள்ள உள்ளக விரிசல்கள் சுனாமியைப் போன்று எதிர்பாராத தாக்கங்களையும், விளைவுகளையும் அரசியலில் ஏற்படுத்தக்கூடும் என்றே அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# காந்தியின் மூன்று குரங்குகளும் கொழும்பின் இனவாத ஊடகங்களும்

மூன்று குரங்குப் பொம்மைகள். ஒன்று தனது இரு கைகளாலும் தனது கண்களை மூடிக்கொண்டிருக்கும்; மற்றது இருகைகளாலும் தனது காதுகளையும் மறைத்துக் கொண்டிருக்கும், அடுத்தது தனது வாயைப் பொத்திக்கொண்டிருக்கும்.

மகாத்மா காந்தியின் அறையில் இக்குரங்குப் பொம்மைகள் காட்சியளிக்கும். இது அவருக்குரிய சின்னங்களில் ஒன்று.

தீயதைப் பார்க்காதே, தீயதைப் பேசாதே, தீயதைக்கேட்காதே எனபது இக்குரங்குகள் எடுத்துரைக்கும் அறிவுரை அடையாளங்கள்.

ஆனால், நல்லதை பார்க்காதே, நல்லதைப் பேசாதே, நல்லதைக் கேட்காதே என்று உபதேசிக்கும் வேறு ஏதாவது சின்னங்கள் கொழும்பில் அரச ஊடகங்களிலும், சிங்கள பௌதத மேலாண்மைவாத ஊடகங்களில் அங்குள்ள ஊடகவியலாளர் பின்பற்றும்படி வைக்கப்பட்டிருக்கிறதோ' என்று எனக்கொரு சந்தேகம் என்று பக்கத்து வீட்டுப் பரமசிவம் என் முன்னால் உட்காா்ந்து தனது ஐயத்தை வெளிப்படுத்தி எனது பதிலை எதிர்பார்த்தார்.

எனக்கும்அப்படியொரு சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது. உமது சந்தேகத்தில் நூற்றுக்கு நூறு நியாயம் இருக்கிறது என்றேன்.

தென்னிலங்கையிலிருந்தும், கிழக்கிலங்கையிலிருந்தும் மற்றும் பகுதிகளிலிருந்தும் இடையிடையே சிங்கள, ஆங்கில ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் தமிழர் தாயகத்துக்கு வந்துபோயிருக்கிறார்களல்லவா? என்றார் பரமசிவம்.

திரு லயனல் பெர்னான்டோ யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருந்தபோது கொழும்பிலிருந்து தென்னிலங்கையிலுள்ள சிங்கள, ஆங்கில ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்தார். வடபகுதியில் பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட ஏற்பாடு செய்தார். யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த கல்விமான்கள், சட்டநிபுணர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப்பலதரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் வழிசெய்தார். இங்குவந்த ஊடகவியலாளர்களும் இங்குபல இடங்களிலும் அளிககப்பட்ட விருந்துபசாரங்களில் நன்கு திளைத்துத் திரும்பினர்.

அவர்கள் இங்குவரும்போதே தங்கள் மனதிலிருந்து இனத்துவேசத்தை அகற்றுவதில்லையென்ற பிடிவாதத்துடன் வந்தது போல அவர்களில் பலர் நடந்துகொண்டார்கள். அவர்கள் கொழுமபு திரும்பியபின் ஊடகங்களில் அவர்களுடைய எழுத்துக்களும் இதையே உறுதிப்படுத்தின.

இதன்பின்னரும் இங்கு தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் வடபகுதிக்கு இன்றுவரை வந்துபோய்க்கொண்டுதானிருக்கின்றனர்.

சில சமயங்களில் மேதாவித்தனமாகவும், சிலவேளைகளில் கிறுக்குத்தனமாகவும் எழுதினார் என்று ஆய்வாளர் நிலாந்தன் குறிப்பிட்ட காமினி நவரதநினா யாழ்ப்பாணத்தில் நெருக்கடி மிகுந்த காலத்தில் 'சற்றர்டே றிவியூ' என்ற வாரப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்து நல்லமுறையில் பணியாற்றினார். பின்னர் கொழும்பிலிருந்தும் 'சற்றர்டே றிவியூவை' இடையிடையே தனது செலவில் வெளியிட்டு வந்தார் என்று நான் நினைவூட்டினேன்.

உண்மைதான், அவர் சிங்கள ஊடகவியலாளர் பலரின் எதிர்ப்பையும் சந்தித்தார் என்று சொன்ன பரமசிவம், இரண்டு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் தமிழர் பண்பாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் மானுடத்தின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் சிங்கள ஊடகங்களைச் சேர்ந்த சிலரும் கலந்துகொண்டார்களே என்று அந்த நிகழ்வையும் ஞாபகப்படுத்தினார்.

இதில் கலந்துகொண்ட 'ராவய' வாரஇதழ் ஊடகவியலாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை உணர்ந்து எழுதுவதாகவே சிங்களம் தெரிந்த சிலர் சொல்கிறார்கள் என்றேன்.

எவர் நியாயத்தைப் புரிந்துகொண்டாலும் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை எடுத்துச் சொன்னாலும் சரி இன வெறியை சிங்கள இரத்தத்துடன் இரண்டறக்கலக்கும் பணியை சிங்கள ஆங்கில ஊடகங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வெற்றிகரமாக நிறைவேற்றி இனி அதை மாற்றவேமுடியாது என்ற கட்டத்தையும் தாண்டிவிட்டது என்றார் பரமசிவம்.

இனியும் மனமாற்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சொன்ன பரமசிவம், சுனாமி அனர்த்தத்தினால் நாட்டில் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது, உலகநாடுகள் ஓடோடிவந்து உதவியளித்துக் கொண்டிருக்கின்றன. வெளிநாடுகள் இலங்கை அரசுக்கு டொலர்களாகவும், பவுண்களாகவும், யூரோக்களாகவும் கொட்டிக்கொண்டிருக்கின்றன.

உயிர்ப்பலி எவ்வளவு, எந்தெந்தப் பகுதிகளில் எப்படியெபபடி ஏற்பட்டது என்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பெற்றோரை இழந்த குழந்தைகளை எப்படிப் பராமரிப்பது. குழந்தைகளைக் கடத்திச்சென்று வெளிநாடுகளில் விலைக்கு வற்றுப் பணம் தேடுவதற்கென்று சில கும்பல்களே காத்து நிற கின்றன. இப்படிச் சில கும்பல்களால் கடத்தப்பட்ட குழந்தைகள் மீட்கப்பட்டிருக்கின்றன.

மேல்நாடுகளில் குழந்தையில்லாத தம்பதிகளுக்கு விற்றுப் பணம் தேடும் பொருட்டு சுனாமிப் பேரழிவில் பெற்றோரை இழநத குழந்தைகளை ஒரு மீன்பிடிப்படகில் ஏற்றிக் கடத்திச்சென்று கொண்டிருப்பதாகவும் இந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக இந்தியக் கரையோரக் காவற்படையினரும், பொலிஸாரும், இந்தியக் கடற்படையினரும் கூட்டாகச் சேர்ந்து அந்த மீன்பிடி 'ட்ரோலர்' படகைத் தேடும் பணியிலீடுபட்டிருப்பதாக ஒரு செய்தி கொழும்பு அரச ஊடகம் வெளியிட்டிருந்தது. இந்த மீன்பிடி ட்ரோலர் இம்மாத முதல்வாரத்தில் கொழும்பிலிருந்து புறப்பட்டதாகவும் இது கொல்கத்தாவைப் போய்ச்சேரக்கூடுமென்றும் இந்தச் செய்தி தெரிவிக்கிறது.

அநாதைகளாகிப்போன இந்தக் குழந்தைகள் கொழும்பிலிருந்து ஏற்றிக் கடத்திச்செல்லப்படும்வரை இலங்கை அதிகாரிகளாலோ, குழந்தைகளை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்று படையில் சேர்க்கமுயற்சிக்கிறார்களென்று ஓலமிடும் கொழும்பு ஊடகங்களைச் சேர்ந்தவர்களாலோ கண்டுபிடிக்க முடியாமற்போனது வேடிக்கைதான்!

இது போகட்டும் கொழும்பிலிருந்து வெளிவரும் அரச ஊடகங்களும்சரி, சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளின் ஊடகங்களாயினும்சரி சுனாமிப் பேரழிவுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தைக் கைவிடவில்லையென்றும், ஆட்களைக் கடத்துகிறார்கள், ஆயுதங்களைக் கடத்துகிறார்கள், சிறுவர்களைக் கடத்துகிறார்கள் என்று நாளும் பொழுதும் செய்திகள் தொடர்ந்து வெளியிடுவதில் மிக ஆர்வமாகச் செயற்பட்டன.

முனபும் கோடரிக்காம்பின் பெயரால் கிழக்கில் கொலைகளையும், கொள்ளைகளையும் தூண்டிவிடுவதில் இந்த ஊடகங்கள் செயற்பட்டன. கோடரிக்காம்பின் பெயரிலும், சங்கூதிகளின் பெயரிலும் அறிக்கைகள் வெளியிடச் செய்வதும், பின்னர் இவை இந்த ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுத்து வெளிவரச் செய்வதும் தொய்வில்லாமல் தொடர்ந்துவந்தன. விறகு ஏற்றிய வண்டில் பாதை விலகிச் சென்றாலும், முஸ்லிம்களின் வண்டிலைப் புலிகள் கடத்தினர் என்றும் இந்த ஊடகங்கள் தம்பட்டமடித்துச் சிண்டுமுடிந்தன.

சுனாமிப் பேரனர்த்தத்தின்போது வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப் புலிப் போராளிகள் உடனடியாக விரைந்துசென்று ஆற்றிய அளப்பரும் சேவையால் இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் இன, மத, பிரதேச வேறுபாடின்றிப் பயன்பெற்றனர். போராளிகளின் சேவையை மனம்திறந்து பாராட்டினர். இந்தச் சேவையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பாராட்டியிருக்கிறார்.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள பிரான்ஸின் தலைநகரான பாரீஸிலிருந்து வெளிவரும் 'மெற்றோ' என்ற பிரபல நாளேடு 'கடற்கோள் அனர்த்தம் நிகழ்ந்த சில நிமிட நேரத்தில் மக்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் கூடிய தங்களது வல்லமையை வெளிப்படுத்திய விடுதலைப் புலிகள், இதன்மூலம் சுயாட்சிக்கான நியாயமான காரணத்தையும் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அனர்த்தம் ஓய்ந்த சில கணங்களில் விரைந்த விடுதலைப் புலிகள், உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்றினார்கள்.

கடலில் மிதந்த சடலங்களை மீட்டெடுக்கும் பணியிலும் மிகச் சிறப்பாக இயங்கினார்கள். விரைந்து முகாம்களை அமைதது பாதிக்கப்பட்ட மக்களை அங்கு தங்கவைத்தனர்.

அதன்பின்னர் பாதுகாப்பு அரண்களை அமைத்து கொள்ளைகள் நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருநதார்கள். காயப்பட்டவர்களை வாகனங்களில் மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் சென்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரத்தம் வழங்குவதிலம் அவர்கள் முன்னின்றார்கள். ஒளி, ஒலிப் பதிவுக்கருவிகளுடனும், கணினிகளுடனும் போராளிக் குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இறந்தவர்களின் முகங்களைப் புகைப்படம் எடுத்தனர். அடையாளம் காண்பதற்காக இவற்றை ஆவணப்படுத்தினார்கள். இதன்பினன்ர் இறந்தவர்களின் உடல்களை எரிக்கும், புதைக்கும் பணிகளிலும் மும்முரமாக ஈடுபட்டனர்.

'புலிகளின் இராணுவம் மிக நன்றாக வேலைசெய்யும் திறன் மிக்கதாக இருந்தது' என்று அந்த ஏடு மேலும் தெரிவித்திருக்கிறது.


இதேசமயம் இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள டி.ஆர். விஜயவர்த்தனா ஆரம்பித்து புகழ்பெற்றதாகக் கருதப்படும் 'டெயிலி நியூஸ்' நாளேடு கடந்த 20 ஆம் திகதிய இதழில் வெளியான ஆசிரிய தலையங்கத்தில் சந்திரிகா அரசையும், காவற்துறையையும் பாதுகாப்புப் படையினரையும் தலையில் தூக்கி வைத்துப் புகழ்ந்தது. தங்கள் பதவியுயர்வுக்கோ வேறு சலுகைகளுக்கோ கால்பிடிப்பதற்காகத் தனது தலையங்கத்தில் '........ இவ்வளவு அழிவுகளும் ஏற்பட்ட சமயத்தில் புலிகள் எங்கே போனார்கள்? என்று எழுதுகிறது.

இந்த ஒரு எழுத்துக்காகவே இதன் ஆசிரியரைச் செவியில் பிடித்துத்தூக்கி வெளியே எறிந்திருக்க வேண்டாமா அதன் நிர்வாகம்!

இப்படி ஆத்திரத்துடன் உரத்துப்பேசிய பரமசிவம், இந்தப் பொறுக்கி ஊடகங்கள் பற்றி நாளைக்கு வந்து சொல்கிறேன் என்று ஆத்திரத்துடன் வெளியேறினார்.

பகுதி XV

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உரையாயோ...

சுனாமி கடற்கொந்தளிப்பு பேரழிவு அனர்த்தம் வடக்கு – கிழக்கு கரையோர மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள் அழிவுகள் பற்றிய நேரடிப் பார்வைப் பதிவுகளும் அது குறித்த உணர்வுப் பகிர்வுகளும்...

இரவு கல்லாற்றுப் பாலத்தில் மோட்டார் சைக்கிளை ஏற்ற இருவர் சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். கையில் பெரிய பொதிகளும் வைத்திருந்தனர். அவர்களிடம் இருந்த பொதியை வாங்கியதுடன, மோட்டார் சைக்கிளை ஏற்ற உதவினேன். அவர்களில் ஒருவர் அந்தப் பார்சல் கவனம், உடைஞ்சிடும்' என்றார். பார்சலில் என்ன? என்றுகேட்டேன். படம்... எங்களில ஆறுபேர் போட்டினம்' என்றார். அப்போதும் எனககு விளங்கவில்லை. இவர்கள் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் போல இருப்பதால், தமக்கு முன்னே ஆறுபேர் பயணமாகி விட்டனர் என்று சொல்கிறார் என நினைத்து 'எங்க போட்டினம்?' என்று கேட்டேன்.

'சுனாமிக்கு... அலையில' எனறார் அவர். தொடர்ந்து அவரது குரல் தழுதழுக்கத் தொடங்கியது.

'சொல்லுங்கோ... ஆரார் என்று கேட்டேன்.

எமது உரையாடல் இது.

'செல்லையா...

அக்கா, மேகராஜா, சுகந்த மதி... அககாட ரெண்டு பிள்ளைகள் கருணாரத்தினம் கஸ்தூரி அடுத்தது கருணாரத்தினம் காவேரி... யோகராஜா அர்ச்சனா... மேகராஜா அபிநயன்...

ஆறுபேரில் நாலு பொடி (Body) தான் எடுத்தது. எங்கட அக்காட Body எடுக்கேல்ல... அக்கா ரீச்சர்'

'எங்கை படிப்பிக்கிறவ?'

'கலைமகள் வித்தியாலயம். அவட மகன்ட Body எடுக்கேல்ல இன்னும்...

அவங்களுக்குத்தான் நாளைக்கு... என்னால் இயன்டத,... நான் மட்டக்களப்பில வேலையெண்டதால், கூட கதைக்கிற சந்தரப்பம் இல்லாமல் போயித்து...

'உங்களுக்கு என்னபேர்?'

'என்ரபேர் சங்கேஸ்வரன்'. கெயார் இன்ரநஷினல... வேல... அக்காவுக்கு ரெண்டு பிள்ளைகள்... ஒரு ஆமபுளப் புள்ளையும்... ஒரு பொம்புளப் புள்ளையும்... அத்தான் கான்சரில செத்துட்டாரு. சனி, ஞாயிறில அக்காவோட இருந்திட்டு வருவன். அண்டைக்கெண்டு சனிக்கிழமையே மட்டக்களப்புக்கு வந்திட்டன்... எங்கட அக்காவின்ட ரெண்டு புள்ளகளுக்காகத்தான் நான் வாழ்ந்தனான்... ஒவ்வொரு வார்த்தைகளுக்குள் விம்மல்... கண்ணீர் தலையை நிமிர்த்தி, தன்னை அசுவாசப்படுத்தினார். கையைப் பற்றி அந்தச் சகோதரனைத் திருக்கோயிலுக்கு வழியனுப்பி வைத்தேன்.

இந்த அனர்த்தத்தில் கல்லாற்றுப் பகுதியில் உயிரிழப்பு நிகழவில்லை. அலை ஏற்படுத்திய சேதத்தைக் காணும் போது, உயிரிழப்பு இல்லை என்பதை நம்பமுடியாமல் உள்ளது. கல்லாற்றைச் சேர்ந்தோர் கல்லடி, நாவலடிக்கும், வேறு இடங்களுக்கும் சென்றபோதுதான் உயிரிழந்துள்ளனர்.

கமலநாதன் என்னும் சமுர்த்தி அலுவலரைச் சந்தித்தபோது, சில விடயங்கள் தெளிவாகின. அன்றைய நிலைவரங்கள் தொடர்பான உரையாடல் இது-

'கடல் வந்து ஓடைக்குள்ளை விழுந்துதான் வந்தது. கடல் சீடைக்குள்ளை விழுந்து, ஓடை நிரபப தண்ணி வந்தது. தண்ணியைத் தாங்கி நிரம்ப அதுக்குப் பிறகுதான் ஊருக்குள் தண்ணி வந்தது. ஓடைதண்ணியத் தாக்கி நிரம்ப ஆக்களுக்குத் தெரியுது. தண்ணி வருகுதெண்டு அப்ப கடல்பொஙகுதெண்டு ஆக்களெல்லாம் ஓடித் தாங்க. ஓடையில்லாம இருந்தா கடல் வந்து நேராக அடிச்சு எங்களைக் கொண்டுபோயிருக்கும்."

'சம்பவம் நடக்கேக்க நீங்கள் எங்கே இருந்தனீங்கள்?"

'வீட்டில்தான் இருந்தம்." இரைச்சல் சத்தம் கேட்க, என்ரை மனிசி சொன்னாவு வோட்டப்பம் பால இறைக்கிறாங்க எண்டு. அப்ப எங்கட அடுத்த ரோட்டில் இருக்கிறாங்க. கோட்டை வாசல் கிராமத்து மக்களெல்லாம் கத்திக்கொண்டு வந்தாங்க. கடல் வருகுதெண்டிச்சினம்.

நாங்கள் வந்து பாக்கிற நேரம், கடலும் ஓடையும் ஒண்டாச் சேர்ந்து பெரும் இரைச்சலா வருகுது. எங்கட உடைமைகளைக் காப்பாத்த ஏலாமல் போச்சுது. எங்கட உயிரைக் காப்பாற்ற ஓடினம்.

சனங்கள் மெயின் றோட்டில இருக்கிற மாடி வீடுகளில ஏறி நிண்டாங்கள். நாங்கள் கண்ணகி அம்மன் கோயில றோட்டால ஓடி, அங்க ஒரு மாடி வீட்டில மேலஏறி நிண்டம். அங்க நிறையச் சனங்கள். ஒரு நாலு மணித்தியாலம் அங்க நிண்டம். கடல் வருமாம், கடல் வருமாம் எண்டு சொல்ல பயமா இருந்தது.

இப்பவும் நாங்கள் வீட்டில வந்திருக்கக்கூடிய வசதிகள் இல்ல. உடைமைகள் எல்லாம் போச்சுது. சமைச்சுச் சாப்பிடப் பாத்திரம் இல்ல, படுக்கப் பாய் இல்ல, கரண்ட் வசதி இல்ல, தண்ணியும் உப்புத்தண்ணியாய் போயித்து, அதால நாங்கள் இப்ப வேறொரு வீட்டில அகதிகளா இருக்கம்.

இப்ப வீட்டைப் பாக்கிறதுக்காக வந்தம். மற்றது, நிவாரணம் வழங்கிற ஆக்கள் நாங்கள் அங்கால இருக்கிறதால எங்களுக்குத் தாறதில்ல. அவங்கள் பாதிக்கப்பட்ட இடங்களப் பாத்துட்டுப் போறபடியால சிக்கல்... நாங்கள் இப்ப வசதி இல்ல. தண்ணிகூட இல்லயண்டா எப்பிடி இருக்கிறது?

அப்ப நிவாரணம் தாற ஆக்கள் வாறபோது வேற ஆக்கள் இங்க வந்து நிண்டு, காட்டை எடுத்துக் கொண்டு போய்ச் சாமான் எடுக்கிறார்கள். தற்போது நடக்கிற சம்பவமும் அதுதான். மெதடிஸ்ட் சேச்சால வந்து சாமான் கொண்டுவந்து காட்டுக்குக் கொடுக்கிறாங்களாமெண்டு அப்ப இஞ்ச வந்தா, எஙகட வீட்டக்காட்டிப் பாதிக்கப்படாத ஆக்கள் சாமான் எடுததிருககிறாங்கள். சம்பந்தப்பட்ட ஆககளைக் கேக்க, உங்கட வீட்டத்தான் காட்டிச் சாமான் எடுததெண்டு சொல்லுறாங்கள். இதால எங்களுக்குப் பெரியபாதிப்பு. எஙகளுக்கு எதுவும் கிடைக்குதிலலை. (தொடரும)

உளவியல்....

ஆர்.கே.மேனன்

# குடும்ப உறவுகளில் ஏற்படும் முரண்பாட்டு விரிசல்களை எப்படித் தீர்ப்பது?

இன்றைய சமூகத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு உள முரண்பாட்டுப பிரச்சினைகளை எடுத்து நோக்குகின்ற பொழுது குடும்ப உறவுகளுக்கிடையே தான் அதிகளவான முரண்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

இது பெரிய பெரிய பிரசசினைகள் ஆகி கொலை, பழிவாங்கல் போன்ற பல விபரீத விளைவுகளுக்கு, வித்திட ஆரம்பித்துள்ளது. ஆகையால், இந்த உறவுகளுக்கிடையே ஏன் பிரச்சினைகள் அதிகரிக்கிறது. பாசங்களின் முக்கியத்துவங்கள் ஏன் துஸப்ரயோகப்படுகின்றது. இதை எவ்வாறான நடத்தைகள் மூலம் ஓரளவு குறைக்க முடியும் என்று நோக்குவது இன்றைய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது.

இது எமது நாட்டில் மட்டும் அல்ல, இந்தியா போன்ற பிறநாடுகளிலும் உறவுகளின் உண்மைப் பெறுமதி தெரியாது சிறிய சிறிய முரண்பாட்டுப் பிரச்சினைகளால் 'மனிதம்" தூக்கி எறியப்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் கொண்டு வருவதை தொலைக்காட்சி நாடகங்கள் படம் பிடித்துக்காட்டுகின்றன. எமது நாட்டில் இந்தப் பிரச்சினை அதிகளவாக இருந்தும் கூட, வெளியீட்டு ஊடகங்கள் மந்தகரமான நிலையில் வளர்ச்சி அடைந்திருப்பதால், எம் சமூகத்தில் இருக்கும் குடும்பப் பிரச்சினைகள் யாருககும தெரியாமல் அதிகரித்துக் கொணடு வருகிறது.

ஏனைய கலாசாரங்களைவிட, எமது தமிழ் கலாசாரம் முன்னிலையில் இருப்பதற்கும், பிறநாட்டவர் இதனை விரும்புவதற்கும், அடிப்படைக் காரணம் - இந்த உறவுக் கட்டமைப்போடு பின்னிப்பிணைந்திருக்கின்ற குடும்ப வாழ்க்கை முறைமையே ஆகும்.

ஆகவே இதற்கிடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் எமது சமூக கட்டமைப்பு, கலாசார சீரழிவுக்கு அடிப்படையாக அமைகிறது எனபதை அண்மையில் பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருப்பீர்கள். மகளைத் தந்தை கற்பழித்த கதைகளும், மகன் தாயைக் கொன்ற கதைகளும், சகோதரங்களுக்கிடையில் வாழ் வெட்டுக்கள் இடம்பெற்ற கதைகளுமென்று பத்திரிகைக் கதைகள் நீண்டு கொண்டு போகிறது.

ஆகவே இந்தக் குடும்ப உறவுகளிக்கிடையிலான பிரச்சினைகளை நாம் சாதாரணமாக எடுத்துவிட முடியாது. ஆழமாக சீர்தூக் கிப் பார்கக வேண்டிய இன்றைய தேவைகளில் ஒன்றாக இது மிளிர்கின்றது. அந்த வகையில் இன்று இந்த சமூகத்தில் இருக்கின்ற உறவுகளுக்கிடையில் ஏற்படுகின்ற சிறிய சிறிய பிரச்சினைகள் பாரிய விஸ்வரூபம் எடுக்கினறதே இதற்கு அடிப்படை என்ன? என்று சற்று சிந்திப்போம்.

பிரச்சினைகள் என்பதும், முரணபாடுகள் என்பதும் மனித வாழ்க்கையில் சாதாரணமான தொன்று. இதை சந்திக்காமல் எவரும் வாழமுடியாது. ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்கும், முரணபாடுகளுக்கும் முகம் கொடுத்து முற்றுப்புள்ளியையும் கண்டு நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தி வறுநடை போடுவதைத் தான் மனித வாழ்க்கையில் சமநிலை ஆளுமை என்பார்கள. இந்த சமநிலை, ஆளுமை என்பது உருவாவதற்கு சில அடிப்படை எண்ணங்கள் எம் மனதில் அடிக்கடி புடமிடப்பட வேணடும். நாம் அனைவரும் நிலையற்ற ஒரு வாழ்க்கைக்கு நிலையான பல நியாயங்களைத் தேடுகினறோம். இது எப்படி சாத்தியமாகும். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

உண்மையான வாழ்க்கையின் அர்த்தம் எது? 'நான் ' என்று சொலலி நிமிரும் தலை எனக்கு வரும் தீராத நோய்க்குப் பரிகாரம் தேடுமா? எமக்குள்ளே நாம் உருவாக்கும் அர்த்தம் மற்றைய பெருமைகளால் எதைச் சாதிக்கப் போகின்றோம், ஏன் அடுத்தவரை அங்கீகரிக்க மறந்து வாழ்கின்றோம், எமக்குரிய தராதரம் குறைந்து விடுமென்றா? அப்படியானால் இந்தத் தராதரம் எது வரை நிலைக்கப் போகிறது? உண்மைத் தராதரம் என்பது எது? என்பது பற்றியெலலாம் அடிமனதில் சிந்திக்க மறந்துவிடுகிறோம். இதனால் தான் எமக்குள்ளே நாம் பெருமையாளர்களாவும் அடுத்தவனை அங்கீகரிக்க முடியாது, எதிர்த்து வாழ்கின்ற ஆளுமை சமநிலை அற்றவர்கள் ஆக வாழ்கின்றோம்.

ஒருவர் எமக்கு எதிராக நிற்கின்றார். பிழையான வழியில் என்னை எதிர்க்கின்றார், பிழையான பாதையில் நடக்கின்றார் என்று ஒருவரை உணரக் கூடிய எங்களுக்கு ஏன் மீண்டும் அவரோடு நாம் எதிர்த்து அவரது தீய நடத்தைகளுக்கு நாமும் உள்ளாகின்றோம். இப்படியான அடிப்படை எண்ணங்கள் எம் மனதில் இடை இடை காணப்படாமையால் தான், சிறிய சிறிய பிரசசினைகளுக்கு தீர்வு காணப்பட முடியாமல் பெரிதாகிறது.

புத்தகங்களைப் படித்துப் பரீட்சை எழுதி, பட்டம் பெற்று பெருமையடைய வேண்டுமென்று எண்ணுகின்ற நாம் - வாழ்க்கைச் சம்பியனைப் பெறவேண்டும் என்று யாரா வது சிந்திக்கின்றோமா?

ஒரு சில குணங்கள் எம்மோடு வளர்கின்றது. ஒரு சில குணங்களை நாம் வளர்க்க வேண்டும். இன்னும் ஒரு சில குணங்களை நாங்கள் சீர் செய்ய வேண்டும். இப்படியான அம்சங்கள் தான் எமது தனிப்பட்ட ஆளுமைகளைத் தீர்மானம் செய்கின்றது.

இப்படியான பலவீனப்பட்ட ஆளுமைகளாலும் குடுமபங்களுக்கிடையில் விரிசல்கள் ஏற்படலாம். இந்த ஆளுமைகளை நாமாக சீர் செய்வதினூடாக சிறியசிறிய பிரச்சினைகளுககு முகம் கொடுத்து, அதனைச் சீர் செய்ய முடியும். இதைவிட இயந்திர உலகமாகப் போய்விட்ட இன்றைய சமூகத்தில் எல்லோருக்கும் வேலைப்பளு, இளைப்பாற நேரமில்லை, சற்று ஓய்வெடுத்தால் உலகம் எம்மை முந்திவிடும் என்ற அளவுக்கு உலக வளர்ச்சிப் போககுகள். இதனால் கூட்டுக் குடும்பமாக இருந்து, குதர்க்கம்பேசி, கும்மாளம் அடித்து பாசங்களைப் பகிர்ந்த காலம் மலையேறிப்போய் - இன்று தனித்தன வாழ்க்கை.

பிள்ளைகளைக்கூடப் பெற்றோர்கள் கவனிக்க முடியாத வேலைபளு என்றால், உறவுகளை எவ்வாறு புதுப்பிப்பது? இவ்வாறு புதுப்பிக்கப்படாத உறவுகளால் உறவுகளில் புனிதத்துவம் யாருக்கும் தெரியவில்லை. யாரும யாரையும் தங்கி வாழாத நிலை புரையோடிக் காணபபடுகிறது.

இதனால் ஒருவரின் தேவை ஒருவருககு முக்கியத்துவம் இல்லாது போகிறது. இப்படியான காரணங்களால் உண்மை உறவுகளின் புனிதத்துவமும், உயர்ந்த தேவைகளும் யாருக்கும் புரியாது. மனிதனை மனிதன் எதிர்க்கின்ற சுபாவம் இப்படியான புறத் தாக்கங்களால மேல் எழ ஆரம்பித்துள்ளது.

அடுத்து வேலைப்பளு அதிகமாக அதிகமாக திட்டமிடல்கள் இல்லாவிட்டால், மன நெருக்கீடு அதிகரித்து சிறிய சிறிய பிரச்சினைகள் கூட விளங்கிக் கொள்ளல்கள், புரிந்துணர்வுகள் இல்லாமையால் பாரிய பிரச்சினைகளுக்கு வித்திட ஆரம்பிக்கின்றது.

புரிந்துணர்வு என்பது தான் மனித உறவுகளுக்கு பலத்தைச் சேர்பபது. ஆனால் இன்றைய சமூகததில் ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்கின்ற சந்தர்ப்பம் அருகிவிடடது.

தேவைகள் அதிகரித்த இன்றைய சமூகத்தில், எதிர்நீச்சல் போட்டு வாழ்வதற்காக ஒவ்வொரு வரும் தம்மைத் தாமே புடமிடுவதற்கான வழிகளைத் தேடுகின்றனரே தவிர, ஒருவரை ஒருவர் புரிந்து மற்றவனை மதித்து வாழவேண்டும் என்ற தேவை எமது சமூகத்தில் குறைந்து விட்டது இதனால் ஒருவரை மிதித்தேனும் நாம் முன்னேறவேண்டும் என்ற குறுகிய மனோபாவத்தில் வாழ்ந்து, அன்றைய தற்காலிக தேவைகளை நிறைவு செய்கின்றனர்.

அடுத்து பெற்றோருககும், பிளளைகளுக்கும் இடையில் அதிக அளவான விரிசல்கள் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுக் கொணடு வருகிறது. முன்னொரு காலம் எதைச் செய்வதென்றாலும், பெற்றோரின் காலில் வீழ்ந்து ஆசிவேண்டி செய்கின்ற வழக்கமிருந்தது.

இப்போது விடியோப் படபபிடிப்புக்காக மாத்திரம் வீழ்ந்து வணங்குமளவுக்கு நாகரீகப் படப்பிடிப்பு வளர்ந்து விட்டது. பெற்று வளர்த்து, கஷ்ட துன்பங்களைக கண்டு, கற்பித்து நிலையான சொந்தத்தை பிள்ளையின் நின்மதியான வாழ்க்கைக்காகத் தேடிக் கொடுத்த பெற்றோர்கள் எல்லாம் இன்று - முதியோர் இல்லத்தில் முகம் வாடி இருக்கின்றனர். அர்ப்ப சொத்துச் சண்டைக்காகவும், அர்ப்ப கௌரவங்களுக்காகவும் பெற்ற உறவுகளின் பெறுமதி தெரியாது, தூக்கி எறிகினற சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இத்தனையும் தொகுத்து ஒரு சிறு வசனத்தில் சொல்வதானால, ஒருவரது பலவீனத்தை எம்மால் உணர முடிகிறது என்றால், ஏன் அதற்கு விட்டுக் கொடுத்து எம்மால் வாழமுடியாது.

சற்றுச் சிந்தித்துப் பாருஙகள் நாமும் அதைச் செய்தால், அவவற்கும் எமக்கும் என்ன வேறுமை. சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் இந்த எண்ணமே பல முரண்பாட்டைத் தீர்க்கும்.

# ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீது ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல்!

## 13 பேர் பலி, 40 இற்கு மேல் படுகாயம்



ஈராக்கில் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து ஷியா முஸ்லிம்கள் செயற்படுவதனைக் கண்டித்து அபுமுசாப் அல் - சர்காவி உரையாற்றிய வீடியோ ஒளி நாடா வெளிவந்த சில மணி நேரங்களில் தலைநகர் பாக்தாத்திலுள்ள ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதாக ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைநகரிலிருந்து தென்மேற்குப் பகுதியிலுள்ள ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 40 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈத் பெருநாளைக் கொண்டாடும் வகையில் ஷியா முஸ்லிம்கள் இந்தப் பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக்கொண்டு வெளியேறிக் கொண்டிருக்கையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை, சர்காவி தனது வீடியோ ஒளிப்பதிவு நாடாவில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஷியா மதத்தலைவர் அலி சிஸ்ராணியின் ஆதரவுடன், ஷியா முஸ்லிம்கள் பலூஜாவில் சுனி முஸ்லிம்கள் மீது தாக்குதல்களை



நடத்திவருகின்றனர். அவர்கள் கடவுளின் பாதுகாப்பான வீட்டை உடைத்து விட்டனர் எனத் தெரிவித்தார். இதனிடையே நேற்று பாக்தாத்தின் வடபகுதியில் கிளர்ச்சியாளர்களின் மறைவிடம்மீது தாக்குதல் நடத்தப்பட்ட வேளை கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் உயிரிழந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

# ஈராக்கில் கடத்தப்பட்ட சீன பணயக் கைதிகள்



ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தினரையும் வெளிநாட்டு பயணிகளையும் தீவிரவாதிகள் கடத்திச் செல்வதும், பணயக் கைதிகளாக அவர்களைப் பிடித்து வைத்துக கொண்டு கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் தலையைத் துண்டித்துக் கொலை செய்வதும் வாடிக்கையாக நடந்து வரும் நிகழ்ச்சியாகி விட்டது.


இப்போது தீவிரவாதிகள் சீனாவைச் சேர்ந்த 8 பேரை பணய கைதிகளாகப் பிடித்துச்சென்றுள்ளனர்.

சீனாவைப் பொறுத்தவரை ஈராக் பிரச்சனையில் அதன் நிலை என்ன அமெரிக்காவுக்கு ஆதரவாக செயறபடுகிறதா என்பதை விளக்கவேண்டும், ஈராக்கில் இருந்து சீனர்கள் வெளியேற வேண்டும் என்று தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

கடத்தப்பட்ட பணயக் கைதிகள் 8 பேரையும் வரிசையாக உட்கார வைத்து அவர்களது படங்களை வீடியோவில் தீவிரவாதிகள் காட்டி உள்ளனர். முகமூடி அணிந்த 2 தீவிரவாதிகள் துப்பாக்கி ஏந்தியபடி நிற்பதைக் காணலாம்.

# அமெரிக்காவின் 43ஆவது அதிபராக ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பதவியேற்றார்!





(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்று முன்தினம் மீண்டும் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜோன் ஹெரியை எதிர்த்துப் போட்டியிட்ட புஷ் மீண்டும் வெற்றிபெற்றார். இதைத் தொடர்ந்து வொஷிங்ரனில் நேற்று 43

உலக நோக்கு



ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

தலைமை நீதிபதி வில்லியம் ரென் குஸ்ட், புஷ்ஷுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பைபிளை சாட்சியாக வைத்து புஷ் உறுதி மொழி ஏற்றுக்கொண்டார். 21 குண்டுகள் முழங்கிய பின் புஷ் 17 நிமிடம் உரையாற்றினார். அவரது பேச்சில் ஈராக் தேர்தலும் தீவிரவாத ஒழிப்பும் இடம்பெற்றன.

பதவியேற்பு விழா நடந்த பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டிருந்தன. கண்கவர் அணி வகுப்புகளும், வாணவேடிக்கை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. புஷ் ஜனாதிபதியாவதை எதிர்த்து சிலர் பேரணி நடத்த முயன்றனர். அவர்களைப் பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

# படுகொலை முயற்சியிலிருந்து கென்ய அதிபர் உயிர்தப்பினார்!

கென்ய நாட்டு அதிபர் லன் சபனா கோன்டே. மிகவும் வயதான இவர் உடல் நலம் குன்றிய நிலையில் உள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் கான்க்ரே நகரில் காரில், பாதுகாப்புப் படை வீரர்களுடன் சென்று கொண்டிருந்த வேளை சில தீவிரவாதிகள் அவரது காரை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் திருப்பிச் சுட்டனர். இதில் அதிபர் காயமின்றி உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் மூசா சம்பில் கூறுகையில் - 'அதிபரைக் கொல்ல நடந்த முயற்சியை முறியடித்து விட்டோம். சிலரைக் கைதுசெய்து விசாரித்து வருகிறோம்" என்றார்.

இந்நிலையில் அதிபர் கோன்டே தொலைக்காட்சியில் தோன்றி, 'நான் நலமாக இருக்கிறேன்' என்று நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.


## தொழில் பயிற்சி பெற்று வெளியேறிய இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**பயிற்சி வகைகள்**

- கட்டடப் பயிற்சி
- மரவேலைப் பயிற்சி
- வீட்டு மின்னிணைப்பு
- நீர் குழாய் இணைப்பு

மேற்படி பயிற்சிகளை நிறைவுபெற்று வெளியேறி தற்போது வேலையற்றவர்களாக இருக்கும் இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இப்பயிற்சிகளில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்களுக்கும் முன்னுரிமையளிக்கப்படும். விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**விண்ணப்ப முடிவுத் திகதி**
**28.01.2005**

*விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி*

மாவட்ட இணைப்பாளர்
**REERDO**
குளப்பிட்டி வீதி
ஆனைக்கோட்டை.

**REERDO**
நிர்வாகம்
யாழ்ப்பாணம்.

(சி-3753)


# இரண்டு பலஸ்தீனச் சிறுவர்களை இஸ்ரேல் ராணுவம் சுட்டுகொன்றது



விளையாட்டுத் துப்பாக்கியை தனது கையில் வைத்து விளையாடிக்கொண்டிருந்த 13 வயது பலஸ்தீன சிறுவனான சாலா இக்கப் இஸ்ரேல் படையினரால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இஸ்ரேல் படையினர் மேற்குக் கரைப் பகுதியிலுள்ள ஜெனின் கிராமத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, குறித்த சிறுவன் தனது கையிலிருந்த விளையாட்டுத் துப்பாக்கியால் படையினரை நோக்கி இலக்குப் பார்த்த வேளையே சிறுவனை படையினர் சுட்டுக் கொன்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் ஒரு குழுவில் நின்ற துப்பாக்கிதாரியை படையினர் சுட்டுக் கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இதே வேளை, ரபா பகுதியில் தனது குடும்பத்தினருடன் வீதியால் சென்று கொண்டிருந்த சலே அபு அலாஸ் (வயது 13) எனும் மற்றொரு சிறுவனும் இஸ்ரேல் படையால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் எவ்வித தகவலையும் தெரிவிக்கவில்லை.

இதனிடையே இஸ்ரேல் பகுதிகள் மீது பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் நடத்தும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் பலஸ்தீன படையினர் காஸாவின் வடபகுதியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் படைத்தளபதி பலஸ்தீன அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனப் படையினர் தற்போது காஸாவின் வடபகுதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளனர்.



இந்த வாரம் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளுடன் நடத்தப்படவுள்ள பேச்சுவார்த்தை மூலம் யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உதவிப்பணிகளை மேற்கொள்வதற்காக பொது அமைப்பு உருவாக்கப்படவேண்டும்

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும், இதன் தலைமை அலுவலகம் திருகோணமலையில் அமைக்கப்படுவது பொருத்தமானதாக அமையும் எனவும் நேற்றுக் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பில் கூட்டமைப்பு எம்.பிக்கள் மத்தியில் இணக்கம் காணப்பட்டதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போது மேலும் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமி அனர்த்தத்தினால் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் எமது மக்களுக்கு ஏற்பட்ட பலவிதமான சொல்லொணாத்துயரங்கள் சம்பந்தமாக தெளிவாக ஆராயப்பட்டது. புலிகளால் இந்த விடயங்கள் சம்பந்தமாகச் சேகரித்த புள்ளி விபரங்கள் உடனடியாகவும் இடைக்காலத்திலும், நீண்டகாலத்திலும் செய்ய உள்ள திட்டங்கள் தொடர்பாகவும் அறிக்கைகள் எமக்குத் தரப்பட்டு அது தொடர்பாக ஆராய்ந்தோம்.

அத்துடன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கான உதவிகளைச் செய்வதற்கு ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சர்வதேச சமூகத்தால் வழங்கப்படுகின்ற பொருட்கள் பாரபட்சமற்ற முறையில் எங்கள் மக்களின் பாதிப்புக்களுக்கு ஏற்ப வழங்கப்படவேண்டும். இதனை பெற்றுக் கொடுப்பதற்காக நாம் கடந்த வாரங்களாக சர்வதேச சமூகத்துடன் கதைத்துள்ளோம்.

எனவே, சர்வதேச சமூகம் இதன அடிப்படையில் உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவோ, அல்லது பொது அமைப்புகள் மூலமாகவோ உதவிகள் வழங்கப்படவேண்டும். அதை விடுத்து அரசு மூலமாக இவ்வுதவிகளை வழங்குவதை நிறுத்த வேண்டும்.

ஏனெனில், அரசு இந்த அழிவிற்காக சர்வதேச சமூகத்தால் வழங்கியுள்ள உதவிகளை எமது தமிழ் மக்களுக்கு வழங்காது பாரபட்சமாக நடந்துள்ளது. எனவே, எமது மக்களுக்கான உதவிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள், அல்லது பொது அமைப்புக்கள் மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், இந்த அழிவுக்கான உதவிகளை வழங்கும் சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகள் தொடரப்படவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி வருகின்றன. எனவே, நாம் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவதாகவும் முடிவெடுத்திருக்கிறோம்.

மேலும், இது தொடர்பாக எதிர்வரும் 8 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் கதைக்கவுள்ளோம். அத்துடன் அதற்கு முன்னதாக நோர்வே சர்வதேச பிரதிநிதிகளுடன் சந்தித்து இது தொடர்பாக அறிக்கைகள் மூலமும் பத்திரிகைகள் வாயிலாகவும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தவுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஊடகவியலாளருடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

### கூட்டமைப்புடன்...

கொழும்பில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள், உதவிகளை வழங்குதல் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாகப் பேசப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தலைவர்...

முன்னதாக நேற்றுக்காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி திரும்பினர்.

இவர்கள் பயணம் செய்த ஹெலி காலநிலை சீர்கேட்டினால் தொடர்ந்தும் பயணிக்க முடியாததால் அனுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டு சிறிது நேரத்தில் கால நிலை சீரடைந்தபின் மீண்டும் கிளிநொச்சிக்குப் புறப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சி வந்தடைந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினரை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் உள்ளிட்ட பொறுப்பாளர்கள், போராளிகள் வரவேற்றனர்.

இன்று கிளிநொச்சிக்கு வரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சன் தலைமையிலான நோர்வேக் குழுவினருடனான பேச்சுக்களில் பங்கேற்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அடுத்த இரண்டு வாரங்களுக்கு வன்னியில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நோர்வே தூதுக்...

பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸகர், விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலாளர் கருணாரட்ன, அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிக்கார, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாகவும், இந்த அழிவுகள் தொடர்பான நிவாரண உதவிப்பணிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

அத்துடன் புனர்வாழ்வுச் செயலணியின் அதிகாரிகளான தாராடி மெல் மற்றும் மனோதித்தவெல ஆகியோர் சுனாமி அழிவுகள் மற்றும் உதவிப் பணிகள் குறித்த புள்ளி விபரங்களை நோர்வே தூதுக்குழுவினருக்கு விளங்கப்படுத்தினர்.

புனர்வாழ்வு நடவடிக்கைக்கு நோர்வே அரசு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என உறுதியளித்த நோர்வே குழுவினருக்கு ஜனாதிபதி சந்திரிகா நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜான பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்து சுனாமியால் அழிந்த பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

அதேவேளை இன்று வன்னி வரும் ஜான் பீற்றர்சன் குழுவினர் முல்லைத்தீவில் சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்க்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு...

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரனும் பங்கு கொண்ட இந்தச் சந்திப்பு பிற்பகல் 2.15 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் - சர்வதேச சமூகத்தால் வழங்கப்படும் உதவிகள் யாவும் இழப்புக்களின் அடிப்படையில் சரியாகப் பகிரப்பட வேண்டும் இதனை அரசு சரியாக மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளோம்.

நோர்வே குழுவினரின் இந்த விஜயம் ஒரு மனிதாபிமான பயணமாகவே அமைந்துள்ளது. இதில் இவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளதுடன், எமது தலைமைப் பீடத்தையும் சந்திக்கவுள்ளனர். அந்த வகையில் இது ஒரு முக்கிய சந்திப்பாகத்தான் அமையப் போகின்றது.

இதில் திருப்பம் வருமா? என்பதைச் சந்திப்பின் பின்தான் கூறமுடியும்.

உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகள் ஓரளவு ஊர்மக்களு

### சமமாக..

களுடன் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- தமிழீழத் தேசிய தலைவருடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்விருக்கும் சந்திப்பில் கலந்துகொள்ளவே தாயகம் திரும்பியுள்ளேன்.

இன்று நடைபெறும் முக்கிய சந்திப்பின் பின்னரே பெறுமதியான கருத்துக்களை வெளியிட முடியும். இதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க கருத்து எதையும் வெளியிடவில்லை.

இயற்கை அழிவுகள் தமிழ் மக்களுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அழிவால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேசம் நல்ல உதவிகளை செய்துள்ளது. இந்த உதவிகள் சமமாகப் பங்கிடப்படாதது குறித்து நாம் கவலை அடைந்துள்ளோம்.

இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளருடன் இது குறித்து முக்கிய கலந்துரையாடலை நடத்தவுள்ளோம். இதற்குமுன் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்னும் இரு...

யர் ஜெனரல் பிராங் பாம்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவ்வகையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் தமது பணி தொடர்பாக அளித்த பேட்டி ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது அழிவடைந்த பிரதேசங்களின் மக்களுக்கு நிவாரணம் மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுவதற்காக 700 படையினருடன் கடந்த 2 ஆம் திகதி இலங்கை வந்திருந்தோம்.

எம்மால் தென்பகுதியில் நீர் விநியோகம், சுத்திகரிப்பு, நலன் புரி நிலையங்களில் நிவாரணப்பணி மற்றும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது. இதேபோன்று வடக்கிலும் 30 படையினர் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எமது இந்தப் பணி எந்தவித குறைபாடுகளும் இன்றி நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இன்னும் இரு வாரங்களில் இது முடிவடையும் என்றும் அதன் பின்னர் நாம் நாடுதிரும்பவுள்ளோம். எனவும் தெரிவித்தார்.

சந்திப்புத் தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் - சர்வ தேச சமூகத்தால் வழங்கப்படும் உதவிகள் யாவும் இழப்புக்களின் அடிப்படையில் சரியாகப் பகிரப்பட வேண்டும் இதனை அரசு சரியாக மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கும் எமது மக்களுக்கும் இல்லை.

அரசின் அண்மைக்கால நடவடிக்கைகள் இந்த நம்பிக்கையீனத்தைத் தந்துள்ளது. எனவே, சர்வதேச சமூகம் சுனாமி கடற்கொந்தளிப்பால் பெரிதும் பாதிப்புற்ற எமது வடக்கு - கிழக்கு கரையோர தாயகப் பிரதேச மக்களுக்கு உதவிகள் சமமாகப் பகிரப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கேட்டுக்

அந்த வகையில் இது ஒரு முக்கிய சந்திப்பாகத்தான் அமையப் போகின்றது.

இதில் திருப்பம் வருமா? என்பதைச் சந்திப்பின் பின்தான் கூறமுடியும்.

உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகள் ஓரளவு ஊர்மக்களுடைய ஆதரவும், சர்வதேச புலம் பெயர்வாழ் மக்களினுடைய ஆதரவுடனும் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடனும் எமது கட்டமைப்புகளை இணைத்து அந்தப் பணியை ஓரளவு திருப்திகரமாக நாங்கள் முன்னெடுத்துள்ளோம். எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய பாரிய வேலைத் திட்டங்களுக்குத்தான் நாம் சர்வதேச சமூகத்திடம் உதவி கோரியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

நாம் கவலை அடைந்துள்ளோம்.

இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளருடன் இது குறித்து முக்கிய கலந்துரையாடலை நடத்தவுள்ளோம். இதற்குமுன் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது அழிவடைந்த பிரதேசங்களின் மக்களுக்கு நிவாரணம் மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுவதற்காக 700 படையினருடன் கடந்த 2 ஆம் திகதி இலங்கை

எமது இந்தப் பணி எந்தவித குறைபாடுகளும் இன்றி நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இன்னும் இரு வாரங்களில் இது முடிவடையும் என்றும் அதன் பின்னர் நாம் நாடுதிரும்பவுள்ளோம். எனவும் தெரிவித்தார்.


**வாணி விலாஸ்**

**சுன்னாகம்**

**வேலையாட்கள் தேவை**

- ★ சமையலாளர்
- ★ சமையல் உதவியாளர்
- ★ உணவு பரிமாறுபவர்
- ★ றொட்டி தயாரிப்பாளர்
- ★ சிட்டை எழுதுநர்
- ★ சிற்றூழியர்கள்

மேற்குறிப்பிட்ட நிலைகளுக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்
பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்.

- ★ உணவு வசதி
- ★ தங்குமிடவசதி

ஊழயர்கள் நேரில் 24.01.2005 இற்குமுன் தொடர்புகொள்ளவும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**வாணி விலாஸ்**
**உரிமையாளர் வவா.**

கே.கே.எஸ். றோட்,
சுன்னாகம். (சி-3747)



**IIS**
**COMPUTER COURSES**

**New Batch Starts on**
**23.01.2005 at 10.00 A.M.**

| | | |
|---|---|---|
| Diploma in MS Office | Diploma in Information Technology | Diploma in Internet Technology |
| Diploma in Computer Programming | Diploma in Eng. Drawing & AutoCAD | Diploma in Desk Top Publishing |
| Diploma in Hardware Technology | Certificate in Java Programming | Certificate in Visual C Programming |
| Certificate in Visual Basic Programming | Certificate in Oracle 9i | Certificate in C# Programming |

**IIS ன் மேற்படி Diploma கற்கைநெறி ஒன்றினை பூர்த்தி செய்யும் நீங்கள் சர்வதேச TATA நிறுவனத்தின் சான்றிதழ் ஒன்றையும் பெற தகுதியுடையவர்களாகிறீர்கள்**



கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில்
இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

**IIS**
INSTITUTE OF INFORMATICS STUDIES
"An *Edexcel* approved training Centre"
# 100, Clock Tower Road, Jaffna. TP No. : 021-222 2831/ 021-222 6933



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சுனாமியால் உயிரிழந்தோருக்கு துரிதமாக மரணச்சான்றிதழ்!

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தத்தின் போது இறந்தவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரங்கள் துரிதமாக வழங்கப் படுவதுடன், காணாமற் போனோரை- அவர்களின் உறவினர்கள் இறந்த தாகக் கருதும் பட்சத்தில் அவர் களுக்கும் மரண அத்தாட்சிப்பத்தி ரம் வழங்கப்படும்.

இறந்தவர்களின் குடும்பங்க ளுக்கு உடனடியாக ரூபா 15 ஆயி ரம் வழங்கப்படுவதுடன் - தாய், தந்தையை இழந்த சிறுவர்களுக்கு அவர்களின் பெயரில் வங்கியில் பணம் வைப்புச் செய்யப்படும் என, அரச அதிபர் கே.கணேஷ் நேற்று முன்தினம் மருதங்கேணியில் நடை பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடிய மர்வு சம்பந்தமான கலந்துரையாட லில் தெரிவித்தார்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்தில், அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற் புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ரவிராஜ், கஜேந்திரன், சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன், ஈழவேந் தன் மற்றும் கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி உட்பட உயர் அதி காரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


இங்கு அரச அதிபர் உரையாற் றும்போது -

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட அரச ஊழியர்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் சகல விதமான நிவாரணங்களும் வழங் கப்படும். இதற்கு கிராம அலுவலர் கள், அரச ஊழியர்கள் புரிந்துணர் வுடன் செயற்படவேண்டும்.

அத்துடன், பாடசாலைகளிலும், நலன்புரி நிலையங்களிலும் உள்ள மக்கள் மிகவிரைவில் தற்காலிக வதிவிடங்களுக்கு மாற்றப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு அரச சார்பற்ற நிறுனங்கள் முன்வரவேண்டும்.

மருதங்கேணி பிரதேச மக் களின் நிவாரண விநியோகத்தை துரிதப் படுத்துவதற்காக, மருதங் கேணி பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலு வலகத்தில் உலக உணவு ஸ்தாப னத்தின் உதவியுடன், தற்காலிக களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட் டது.

அத்துடன், பாடசாலைக்கு தற் காலிக கொட்டகைகள் அமைக்கப் பல சுகாதாரவசதிகள் கொண்ட நிரந்தர வீடுகள் மிகவிரைவில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (122)



ஹஜ் பெருநாளான நேற்று - சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் சுகம டையவும், இறந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்திபெறவும் வேண்டி நாவாந் துறை புதிய ஜும்மா பள்ளி வாசலில் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டி ருப்பதைக் காணலாம்.

## சுருக்கெழுத்து கழக வருடாந்த பொதுக்கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட் டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள் ளது.

இதில் புதிய செயற்குழு உறுப் பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ள னர். எனவே, இந்த ஆண்டுக்கான சந்தாப் பணத்தை கொண்டுவரு மாறு வடமராட்சி சுருக்கெழுத்து கழக செயலாளர் அறிவித்துள்ளார்.

## யமஹா இயந்திரங்கள் திருத்தப்படுகின்றன

வடமராட்சி கிழக்கில், சேத மடைந்த யமஹா படகு வெளியி ணைப்பு இயந்திரங்களைத் திருத்து வதற்காக யமஹா எஞ்சின் திருத்து நர்கள் வடமராட்சி கிழக்குக்கு வந் துள்ளனர்.

எனவே, யமஹா வெளியி ணைப்பு இயந்திரங்களை வைத்தி ருப்பவர்கள் வடமராட்சி கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்க சமா சத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (14)

## சேத மதிப்பீட்டு விபரங்களை அனுப்புமாறு கோரிக்கை

சுனாமி தாக்கத்தால் சேத மடைந்த அரசாங்க கட்டடங்கள், பொதுமக்களுக்கான சேவைகள், ஆவணங்கள், வேறு உபகரணங் கள் என்பவற்றின் சேத மதிப்பீட்டுத் தொகை விபரங்களை உடனடி யாக அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஜனவரி 15 ஆம் திகதி தொடக் கம் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ள செயற்திட்டத்தின் கீழ் பாதிக்கப் பட்ட திணைக்களங்கள், உள் ளூராட்சிசபைகள், பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் தமக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத் தினூடாகத் தொலைபேசி அல்லது தொலைநகல் மூலம் அனுப்பி வைக்குமாறு, மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் செயலாளர் ஏ.எம்.சந்திரபால சுற்றறிக்கை மூலம கேட்டுள்ளார். (101)

## ஆபாச படம் பார்த்த யுவதிகள் எச்சரிக்கையின் பின் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

ஆபாசபடம் பார்த்த இரண்டு யுவதிகள் கலாசாரம் பேணும் குழுவினரால் விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதுபற்றிப் மேலும் தெரியவருவதாவது -

குறித்த படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, 'டெக்' பழுதடைந்தமையால் அந்த வீடியோப் பிரதியுடன் 'டெக்'கை திருத்தக் கொடுத்த போதே டெக்கினுள் ஆபாசப் படப் பிரதி இருந்தமை தெரிய வந்தது.

இது குறித்து உடனடியாக கலாசாரம் பேணும் குழுவுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து குறித்த யுவதிகளை கலாசாரம் பேணும் குழுவினர் விசாரணை செய்தனர். தமக்கு தெரிந்த இளைஞர்கள் இந்த ஆபாசப்படப் பிரதியைத் தந்ததாகவும் தெரிவித்தனர். குறித்த இளைஞர்களை விசாரித்தபோது, ஆபாசப் படப் பிரதியை இராணுவத்தி னர் தமக்குத் தந்ததாகக் கூறினர்.

பின்னர் இந்தச் சம்பவத்தோடு தொடர்புபட்ட அனைவரையும் கலாசாரம் பேணும் குழுவினர் கடுமையாக எச்சரித்த பின்னர் விடுதலை செய்தனர். (91)

## சுனாமியால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு சிற்றூர்தி சேவைச் சங்கத்தினர் நிதியுதவி!

யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, குடும்ப உறுப்பினர்களை இழந்த குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றனர்.

முதற்கட்டமாக தொண்டமானாறு, வல்வெட்டித்துறை பகுதிகளில் நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்ப அங்கத்தவர்களை இழந்த வர்களுக்கு இந்த உதவுதொகை வழங்கப்பட்டு வருகிறது.

இடைத்தங்கல் முகாம்களுக்குச் சென்ற தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் மற்றும் கிளைச்சங்கத் தலைவர்கள் ஆகியோர் கூட்டாகச் சென்று இந்தக் கொடுப்பனவை வழங்கினர். (17)

## கணினிக் கற்கை நெறிக்கான புலமைப் பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஏசியன் கொம்பியூட்டர்ஸ் வழங் கும் கணினிக் கற்கைநெறிகளுக் கான புலமைப் பரிசில் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான இலவச அனுமதிகளை யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச் சேரி மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஏசியன் பயிற்சி நிலையங்களில் பெற்றுக்கொள்ள லாம்.

இதுவரை அனுமதி அட்டை களைப் பெறாதவர்கள் பரீட்சை நிலையங்களில் நாளை காலை 9 மணிமுதல் அனுமதி அட்டை களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## சுனாமி அனர்த்த இழப்பீட்டு விபரங்கள் கடற்தொழில் திணைக்களத்தால் சேகரிப்பு

(வடமராட்சி)

அண்மையில் ஏற்பட்ட சுனாமி கடற் கொந்தளிப்பு கடல் அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள கடற் தொழிலாளர்களின் இறப்பு, காய மடைந்தோர் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் இழப்பு சம்பந்த மான விபரங்களை யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழில் திணைக் களம் திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

கடற்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் அந்தந்த கிராமங்களுக்குச் சென்று, கிராம மட்ட கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகளின் உதவியுடன், நேர டியாகப் பாதிக்கப்பட்ட மக்களிடம் விபரங்களைச் சேகரித்து வருகின்ற னர்.

இதற்கான படிவங்களை வழங்கி, விபரம் திரட்டும் பணியில் தாளையடி கடற்தொழில் பரிசோத கர் ந.கணேசமூர்த்தி தலைமை யிலான குழுவினர் ஈடுபட்டுள்ள னர். (21)

## வல்லையில் இரும்புப் பாலம்; பணிகள் இடம்பெறுகின்றன!

### பொறியியலாளர் தகவல்

சேதமடைந்த வல்லைப் பாலத் துக்குப் பதிலாக 74 மீற்றர் நீளம் கொண்ட இரும்புப் பாலம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக, அந்தப் பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட் டிருக்கும் பொறியியலாளர் தெரி வித்தார்.

வடக்கு - கிழக்கில் இவ் வாறான சுமார் 85 பாலங்கள் அமைக்கப்படுகின்றன. யாழ். மாவட் டத்தில் 5 பாலங்கள் அமைக்கப் படுகின்றன. இந்தப் பாலங்கள் நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நிர் மான அமைச்சின் திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது.

வல்லைப் பாலம் அமைப்பதற் கான மூன்று அடிச்சுவர்கள் அமைக் கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. தற்காலிக பாலங்கள் அமைக்கப்பட்டு மக்கள் போக்கு வரத்து தடைப்படாத வகையில் புதிய பாலங்கள் அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றன.

புதிதாக அமைக்கப்படவுள்ள பாலத்தின் மேல் கட்டுமானங்கள் நடைபெறுகின்றபோது, சுமார் இரண்டு வார காலம் வல்லைப் பாலத்தின் ஊடாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடையும் அல்லது அதற்கு அருகாமையில் தற்காலிக பாலமொன்று அமைக்கப்படவேண் டும்.


புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பாலத்தினூடாக ஒரே சமயத்தில் இரண்டு பஸ்கள் பயணிக்கும் அகலத்தை கொண்டதாக இருக்கும், பாலம் அமைக்கும் பணி முடிவடைந்த வுடன் வீதிகளின் அகலம் விஸ் தரிக்கப்படவேண்டிய தேவை ஏற் படும் எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

## சேதமடைந்த பகுதிகளைத்திருத்த உதவி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட வடமராட்சி வடக்கு கடற் றொழிலாளர்களின் சேதமடைந்த மீன்பிடி படகுகளையும், இயந்திரப் படகுகளையும் திருத்தியமைத்துக் கொடுக்க ஜேர்மனியைச் சேர்ந்த 'ரகொனிக்' எனும் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த நிறுவன அதிகாரி ஸ்ரீ பன் அண்மையில் வடமராட்சியில் பாதிக்கப்பட்ட கரையோரப் பிர தேசங்களைப் பார்வையிட்டு, இது தொடர்பாக கடற்றொழிலாளர் சங் கப் பிரதிநிதிகளுடன் கலந்து ரையாடி, சேதமடைந்த கடற்றொழில் உபகரணங்களைத் திருத்திய மைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (14)

## தும்பளை இலட்சுமணன் தோட்டப் பகுதியில் கழிவுகள் கொட்டுவதால் சுகாதார சீர்கேடு



(வடமராட்சி)

பருத்தித்துறை தும்பளை இலட்சு மணன் தோட்ட கிராமத்தில் நகர சபைக் கழிவுகள் கொட்டப்படு வதையும், செம்மண் பிட்டிகளில் மணல் அகழ்வதை யும் தடுத்து நிறுத்துமாறு இந்தப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ள னர்.

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இலட்சுமணன் தோட்ட கிராமத்தினூடாகச் செல்லும் மாதனை - கற்கோவளம் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது, நகரசபைக் கழிவுகள் கொட்டுமிட மாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த வீதியின் அருகிலுள்ள காணிகளில் பருத்தித்துறை நகரசபைக் கழிவுகள் மற்றும் இறைச் சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள் உட்பட தற்போது கடலனர்த்தக் கழிவுகளை வீசுவ தால், அருகிலுள்ள கிராம மக்களுக்குப் பெரும் சுகாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுகிறது. அத்து டன் கட்டாக் காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்து, மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கற்கோவளம் மக்கள் மாதனையூடாகப் பருத்தித் துறை நகருக்குச் செல்லும்போது, இந்தப் பாதையில் கழிவுகள் கொட்டப்படுவதால் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன், இங்கே காணப்படும் செம்மண் பிட்டிகளில் தொடர்ந்து மண் அகழ்வதால் மழை காலத்தில் நீர்தேங்கி நுளம்புப்பெருக்கம் ஏற்படுவ



துடன், பாதையில் பாரிய குழிகளும் ஏற்படுகின்றன.

எனவே, இவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ள னர். (14)

# முல்லைத்தீவு மீனவர்களுக்கு இலவச படகு திருத்தும் நிலையம்

(முல்லைத்தீவு0

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கொந்தளிப்பால் மிகவும் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள் திருத்தல் மற்றும் படகு இயந்திரங்களைத் திருத்திக் கொடுப்பதற்கான இலவச நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

50 லட்சம் ரூபா செலவில் லண்டன் சிறி கனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தின் நிதியுதவியுடன், தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்தத் திட்டம் பற்றிக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமி கடற்கொந்தளிப்பால் சகல உடமைகளையும் இழந்து, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்கள் மீண்டும் தம் வளங்களைக் கட்டியெழுப்ப முடியும் என்ற உறுதியை வழங்கக்கூடிய இவ்வாறான வேலைத திட்டங்கள் - இன்று உடனடித் தேவையாக உள்ளது.

இந்த வகையில், தமிழ்த் தகவல் தொழில்நுட்ப நிதியத்தின் முயற்சி சிறப்பானது எனத் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு வலயத்துக்கு தெரிவான 14 பட்டதாரிகளின் பெயர் விபரங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு மேலும் 14 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு -

எல்.பிரேமானந் (42, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), எஸ்.சிவசிறி (90, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), கே.செல்லராசா (19, கொண்டலடி ஒழுங்கை, நல்லூர்), பி.பாலமகிந்தன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), வி.தயாபரன் (84/2, அரசடி வீதி, யாழ்ப்பாணம்), கே.பாலமுருகன் (186, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்).

ஆர்.சிவரூபி (சேருக்காபுலம், தெலலிப்பளை), எம்.தக்ஷினி ( முத்துக் கிருஸ்ணா வீதி, சுன்னாகம்), கே.கோமளாதேவி (நாவற்குழி மேற்கு, கைதடி), எஸ்.சசிகலா (ஆராச்சியார் வளவு, சுதுமலை தெற்கு, மானிப்பாய்), எஸ்.சிவரஞ்சினி (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்), எல்.கீதா (மூளாய் வீதி, வட்டுதெற்கு), ஜே.மோகனா (பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்), ரி.சிவதர்சினி (சிவன் மாளிகை, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி).



வன்னிப் பதிவுகள்

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஜனவரி - 22**

1498 : கொலம்பஸினால் இரண்டு தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுக்கு செயின்ட் வின்சன்ட், கிரீன்டையின்ஸ் எனப் பெயரிடப்பட்டன.

1863 : ரஷ்ய ஆதிக்கத்தின் அடக்கு முறையை எதிர்த்து போலந்து மக்கள் புரட்சியைத் துவங்கிய நாள்.

1905 : ரஷ்ய வரலாற்றில் இன்றைய தினம் ''இரத்த ஞாயிறு'' என அழைக்கப்படும் நிகழ்வு அரங்கேறிய நாளாகும். செயின்ட் பீட்டர்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது மனைவி, குழந்தைகளுடன் பாதிரியார் காபோன் தலைமையில் தமது குறைகளைத் தெரிவிக்க, ஜார் மன்னரின் குளிர்கால அரண்மனையை நோக்கி ஊர்வலமாகச் சென்றபோது, அவர்களைத் துப்பாக்கி, பீரங்கிகள் கொண்டு சுட்டு அழிக்கப்பட்ட நிகழ்வு இன்று தான் அரங்கேறியது.


1947 : சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள்.

1960 : பசுபிக் கடலின் மிக ஆழமான பகுதியாக ''மரியான அகழி''யின் தரைப் பகுதியை இன்று ஜாக்யூஸ் பிக்கார்ட், டொனால்ட் வல்சும் என்ற இரு கடலோடிகளும் சென்றடைந்தனர். 35,800 அடிகள் ஆழமுடைய இந்தப் பகுதியின் தரையில் இவர்கள் இருபது நிமிடங்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1975 : புவியினது வளங்களை ஆய்வு செய்யும் நோக்கோடு, அமெரிக்காவால் இன்று லாண்சாட் - 2 என்ற செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

1983 : அணுவின் உள் துகள்களில் ஒன்றான டபிள்யூ.போஸன் என்னும் துகள் கண்டுபிடிக்கப்பட்ட நாள் இன்றாகும். ஜெனீவா நகரிலுள்ள ஆய்வுகூடம் ஒன்றில் வைத்து கார்லோ ரூபியா என்ற அணு விஞ்ஞானி இதைக் கண்டுபிடித்தார்.

தொகுப்பு - சந்துரு



கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் தேசிய நீர் வழங்கல வடிகாலமைப்பு சபைக்கான கட்டடத்தைப் படத்தில் காணலாம்.

# உளவளத் துணையாளர்களுக்கு 12 நாட்கள் பயிற்சிப் பட்டறைகள்

சுனாமி கடற்கொந்தளிப்பால் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு உதவுவதற்கான, பணிகளைத துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஜிரிஇசற், கெயர் ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இதற்கென உளவளத்துணையாளர்களுக்கான நான்கு நாள் குறுகிய விரைவுப் பயிற்சிப்பட்டறை ஒன்று-யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகிறது.

மனநல வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரத்தின் வைத்திய குழுவினரும், ஜேர்மன் சமஷ்டி குடியரசின் அனுசரணையுடன் இயங்கும் 'பாதிக்கப்பட்டோரின் குரல்' என்ற நிறுவனத்தினரும் இணைந்து, இந்தப் பயிற்சிப்பட்டறையை யாழ்ப்பாணம் சாந்திகம் உளவளத் துணை நிலையத்தில் நடத்தி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் உளவளத்தை மேம்படுத்துவதற்காக வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள கல்வி வலயங்களில் தொடரந்தும் இத்தகைய பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த புதன் கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி வரையிலான 12 நாள் பயிற்சிப்பட்டறைகள் வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மூதூர், கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய கல்வி வலயங்களில் கோடட ரீதியாக உள்ள உளவளத்துணையாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இருமாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா

(கிளிநொச்சி)

பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில், நிகொட் திட்டத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவிருக்கும் இருமாடிக் கட்டடத்தின் அடிக்கல் நாட்டுவிழா - கடந்த 19 ஆம் திகதி காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கைத்தமிழன் ஏற்றிவைக்க, பாடசாலைக் கொடியை அதிபர் ஞானசீலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அகவணக்கமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கான ஆசியுரையை அரச அதிபர் நிகழ்த்தி, தொடர்ந்து இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டினார்.

கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி வலயக்கலவிப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், பூநகரி பரதேச தமிழீழ கலவிக்கழகப் பொறுபபாளர் ஜீவராஜ், வேங்கைத்தமிழன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

# கணினிக் கற்கை நெறியை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ்

வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் அமைந்துள்ள கணினி கற்கை மையத்தில், கணினி கற்றை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஆசிரியை க.பொனமணி தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வின் சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் கரிகாலன், வட்டக்கச்சி மாகாவித்தியாலய உப அதிபர் திருமதி பொனனுத்துரை ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கணினி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 5 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கணினி கற்கைநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரங்க ஆற்றுகை

(வவுனியா)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், அக்கரைப்பற்று நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு, வவுனியா அருங்காலயா அமைப்பினர் உளவளத்துணை பற்றி அரங்காற்றுகைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கபில நிற தத்தியின் தாக்கம் அதிகரிப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையில் கபிலநிற தத்தியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

2004, 2005 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்பொழுது கபிலநிற தத்தியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

விவசாயிகள் இந்த நோய்த் தாக்கம் தொடர்பாக விவசாயத் திணைக்களத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு வற்றாப்பளையில் அந்தியேஷ்டி

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால், முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்த அனைத்து மக்களுடைய அந்தியேஷ்டி கிரியைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் நடைபெறவுள்ளன.

மறுநாள் ஆலயத்தில் கடற்கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களுக்கான ஆத்ம சாந்தி பூசையும், விசேட பிரார்த்தனையும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடற்கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது உரித்துடையவர்கள், 24 ஆம் திகதி காலை வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கு வருகை தருமாறு ஏற்பாட்டாளர்களும், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினரும் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரத்து 750 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த அனர்த்தம் காரணமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மருதநகர் பிரதேசத்தில் முன்பள்ளி திறந்துவைப்பு

மருதநகர் 4 ஆம் வாய்க்கால் பிரதேச சிறார்களின் நலன் கருதி, கிருஷ்ணா முன்பள்ளி கடந்த 17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த முன்பள்ளியால் 25 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பயனடைந்துள்ளனர்.

வணபிதா ரூபன், ஜெயராசா, தனபாலன் ஆகியோரின் பெருமுயறசியால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த முன்பள்ளிகளின் வளர்ச்சிக்கு பொது அமைப்புக்கள் உதவி புரிந்து, சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு துணைபுரிய வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நான்கு சிறுவர்களின் சடலங்கள் மீட்பு!

சுனாமி கடற்கொந்தளிப்பின் போது, உயிரிழந்த மேலும் நான்கு சிறுவர்களின் சடலங்கள் - கட்டட இடிபாடுகளுக்கிடையில் இருந்து மீட்புப்பணியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டன.

முல்லைத்தீவு நகரில் இடிபாடுகளின் மத்தியில் இருந்து மீட்கப்பட்ட இந்தச் சடலங்கள் - கடற்கரையில் வைத்தே மீட்புப்பணியாளர்களால் தகனம் செய்யப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்கள் ஆறு வயதுக்கும், எட்டு வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுடையதெனத் தெரிவித்த மீட்புப்பணியாளர்கள், அடையாளம் காணமுடியாத அளவுக்கு இவை பழுதடைந்திருந்ததாகவும் தெரிவித்தனர்.